Registered No. M. 5068

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0]  ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள்.  [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி ௵ வைகாசி ௴ 4௳ 17—5—1948 ஹிஜிரி 1367 ரஜப் ௴ 7௳ திங்கட்கிழமை. } இதழ் 17

சென்ற வாரத் தொடர்ச்சி.

## ஜமீயத் கூட்டத்தில் மௌலானா மதனியின் அறிவுரை.

—o—

1947-ஜூன் 3-ந் தேதி பிரிவினைத் திட்டம் மிஸ்டர் ஜின்னா கோஷ்டியாருக்கு பாகிஸ்தானைக் கொடுத்து விட்டது. மூன்று வருஷங்களுக்கு முன் 1944-ல் மிஸ்டர் ராஜகோபாலாசாரியார் இதே திட்டத்தை சமர்ப்பித்தார். பதினான்கு நாட்கள் காந்தி ஜின்னா பேச்சுவார்த்தை நடந்தது. முடிவில் நொண்டி பாகிஸ்தான் என்று சொல்லி மிஸ்டர் ஜின்னா அதை கிராகரித்திருந்தார். லட்சக்கணக்கான மக்களின் அழிவைத்தான் நொண்டி பாகிஸ்தானின் இன்னொருகால் என்று மிஸ்டர் ஜின்னா நினைத்தாரோ!

பிரிவினை அறிக்கை ஒரு தீர்ப்பாகவே வெளிவந்தது. ஒரு வருஷமாய் நடந்த கொலைகளால் மனவேதனை அடைந்திருந்தவர்கள் அதை அமைதியைக் காக்கும் சஞ்சீவி என்றே நினைத்தனர். புரட்சி எதிர்ப்பு சக்திகள் நாட்டை சர்வ நாசத்தில் ஆழ்த்த சதி செய்வதாக யாரும் நினைத்திருக்கவில்லை.

எல்லை நிர்ணய விஷயத்தில் குறிப்பாக லாகூரில் அளிக்கப்பட்ட தீர்ப்பு அழிவுக்கு அடிகோலிவிட்டது ஒரு வகுப்பார் இன்னொரு வகுப்பாரின் எண்ணிக்கையைக் குறைக்கும் வேலையில் இறங்கினர். மேலும் பிரதேச தகராறை தீர்க்க நியமிக்கப்பட்ட கமிஷன் துரதிர்ஷ்ட வசமாக முஸ்லிம்களுக்கு ஆத்திரமூட்டுப் தீர்ப்பு கண்டு பிடிப்பதில் வெற்றி அடைந்துவிட்டது.

இத்துறையில் பஞ்சாப் ரகசிய போலீஸ் கமிஷனர் மிஸ்டர் ஜெங்கின்ஸ் பிரிட்டிஷ் ரகசிய போலீஸ் தலைமை அதிகாரிக்கு எழுதிய கடிதம் எப்படியோ இங்கிலாந்து பத்திரிகைகளில் பிரசுரமாய்விட்டது. "எல்லைக்கமிஷன் தீர்ப்பால் முஸ்லிம்களிடையே கொந்தளிப்பு அதிகரித்துவிடும் என்று நம்ப இடமிருக்கிறது. அதற்குப் பிறகு முஸ்லிம்கள் பிரிட்டிஷ் பாதுகாப்பில் இருக்கவே விரும்புவார்கள்." என்று மிஸ்டர் ஜெங்கின்ஸ் அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த கடிதத்தைக் குறித்து 'பாகிஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை கீழ்வருமாறு அபிப்பிராயம் தெரிவித்தது.

"பஞ்சாப் கவர்னராயிருந்த மிஸ்டர் ஜெங்கின்ஸின் போக்கைக் குறித்து விவரிக்கவேண்டிய அவசியமில்லை. நம்முடைய துன்பங்களுக்கெல்லாம் நம்முடைய மாஜி நிர்வாகிகளே காரணம் என்பதை இக்கடிதம் எடுத்துக் காட்டுகிறது. பிரிட்டிஷ் அதிகாரிகள் அதிகாரமாற்றத்துக்காக நம் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்த அதே சமயத்தில் பிரிட்டிஷ் ஆபீஸர்கள் அந்தரங்க ஏஜெண்டுகளின் வலையை விரிப்பதில் முனைந்திருந்தனர். எல்லை நிர்ணயக் கமிஷன் தீர்ப்பு முஸ்லிம்களை ஆத்திரமூட்டக்கூடியதா யிருக்கும் என்று முன்கூட்டியே மிஸ்டர் ஜெங்கின்ஸுக்கு எப்படித்தெரியும்?

எல்லைத்தீர்ப்பு முன்னாலேயே செய்தாய்விட்டதென்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது நியாயத்துக்குப் புரம்பான முடிவுகளாலேயே இந்தியா பாகிஸ்தான் உறவைக் கெடுக்க முடியும். பலஹீனமான கட்சிக்கு தீங்கிழைக்கப்படும்போது இயற்கையாகவே அவர்கள் பிரிட்டிஷ் தயவை நாடுவார்கள் என்பதற்காகவே முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்யப்பட்டிருக்கிறது. முஸ்லிம்கள் உதவியின் ஆசையால் திரும்பவும் பிரிட்டிஷ் வலையில் விழுந்துவிட வேண்டுமென்பதே அதன் நோக்கம்''

## ஆகஸ்ட் 15-ன் வருகை.

ஜூன் 3-க்குப் பிறகு ஆகஸ்ட் 15-ஐ அகில இந்தியாவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது. விடுதலை நாள், அடிமைத் தளைகள் அறுந்து விழும் சுபதினமான ஆகஸ்ட் 15-ஐ கொண்டாட இந்தியா பாகிஸ்தான் இரண்டிலும் சுதந்திர விழா ஏற்பாடுகள்நடந்து கொண்டிருந்தன ஆயினும் ஆகஸ்டு 15ந்தேதி உதயமான சூரியனுடையகிரணங்கள் இந்தியா பாகிஸ்தான் கொடிகள்மீது விழுவதற்கு முன் பிற்போக்காளர்களின் நாசகரமான சூழ்ச்சிகளுக்கு இலக்கான பல்லாயிரக்கணக்கான நாதியற்ற பிணங்கள், தீங்கிழைக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள் காயப்பட்டு துடித்துக்கொண்டிருந்த நிரபராதிகளின் மீது பட்டன. வகுப்பு வாதத்தின் பெயரால் கலவரங்கள் நடந்திருப்பினும் ஈவிரக்கமற்ற ஏகாதிபத்திய பித்தர்களான டோரிகளின் சூழ்ச்சிகள் வகுப்புவாத திரைமறைவில் வேலைசெய்தன இந்த உண்மையை மஹாத்மாகாந்தியால் அனுப்பி வைக்கப்பட்ட பண்டித சுந்தர்லால் பஞ்சாப் சுற்றுப் பிரயாண முடிவில் விடுத்த நீண்ட அறிக்கையில் கீழ்வருமாறு தெளிவாக்கியுள்ளார்.

“பல்வேறு இடங்களில் ஹிந்து, முஸ்லிம், சீக்கியர்கள் கலவரங்களில் உபயோகித்த ஆயுதங்களும், வெடி மருந்துகளும் பொருப்பு வாய்ந்த பிரிட்டிஷ் அதிகாரிகளின் மூலம் கிடைத்திருக்கிறது என்பதை பாரபட்சமற்றதொரு நீதிஸ்தலத்தின் முன் நிரூபிப்பதில் எவ்வித சிரமமும் இருக்காதென்று நம்புகிறேன். கர்னலாக இருந்த பிரிட்டிஷ் அதிகாரியை நீக்கிவிட்டால் ஒரு ஹிந்து சீக்கியனும் கொள்ளையிடப்படமாட்டான் என்று லயால்பூர் முஸ்லிம் டிபுடி கமிஷனர் டிஸ்டிரிக்ட் போர்டு தலைவரான ஒரு ஹிந்துவிடம் சொன்னார் மார்ச் மாதம் ராவல் பிண்டியில் நடந்த கலகங்களுக்கெல்லாம் டிபுடி கமிஷனர் சி. எல். கோட்ஸும். ஹோம் செக்ரிடரி மிஸ்டர் மக்டொனால்டுமே நேரடியாக பொருப்பு என்று ராவல் பிண்டியிலுள்ள ஹிந்து முஸ்லிம்கள் அபிப்பிராயப்பட்டனர். கிழக்கு பஞ்சாபிலுள்ள ஒரு ஜில்லா வாசிகள் சிறுபான்மையோருக்கு தீங்கிழைக்கக்கூடாதென்று தீர்மானித்ததைக் கண்ட ஒரு பிரிட்டிஷ் அதிகாரி மீண்டும் கலகத்தைத் தூண்டுவதற்காக நீண்ட தூரம் காரில் பிரயாணம் செய்து வழியில் கண்டவர்களையெல்லாம் சுட்டுத் தள்ளிக்கொண்டே போனான். இன்னொரு ஜில்லாவில் ஒருவகுப்பினர் பக்கத்திலுள்ள ராணுவ முகாமுக்குச் சென்று உதவியைக் கேட்டபோது நாட்டின் நிர்வாகத்தை திரும்பவும் ஏற்றுக் கொள்ளும்படி பிரிட்டிஷ் கவர்மெண்டாரை விண்ணப்பித்துக் கொள்ளும்படியும் அதற்காக இந்தியர்களின் கையெழுத்துக்களை சேகரிக்கும்படியும் அங்கிருந்த வெள்ளை கமாண்டர் அவர்களுக்கு யோஜனை கூறினான். அதையொட்டி கையெழுத்துகளும் வாங்கப்பட்டன. பிறகு அந்த யோஜனை கைவிடப்பட்டது, லயால்பூரைச்சேர்ந்த ஒரு முஸ்லிம் போலீஸ் அதிகாரியிடம் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி ஒருவன் ‘'நாம் இந்தியாவை விட்டுப்போவதாக நினைக்கின்றீர்களா? இல்லை. நாம் மலாயாவில் ஒளிந்துகொண்டிருப்போம் இங்கு நிலைமை மோசமடையும்போது திரும்பி இங்கு வந்துவிடுவோம்'' என்று சொல்லி இருக்கிறான், இம்மாதிரி ஏராளமான உதாரணங்கள் காட்டலாம். பொருப்பு வாய்ந்த பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் கலகங்களைத் தூண்டிவிடவும் நீடிக்கச் செய்வதற்கும் தங்கள் சாதனங்கள் அனைத்தையும் உபயோகித்தனர்! நாம் கெட்டவர்கள் என்பதை வெட்கத்துடன் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆயினும் ஒரு வகுப்பார் இன்னொரு வகுப்பாரைக் குறித்து நினைக்கும் அளவுக்கு ஹிந்துவோ, முஸ்லிமோ சீக்கியனோ கெட்டவனல்ல என்பது நிச்சயம்.”

செப்டம்பரில் கலவரங்கள் உச்சத்தை அடைந்தன. பஞ்சாப், டில்லியைக்கடந்து யு. பி. ஸி. பி. மாகாணங்களிலும் பரவ ஆரம்பித்தபோது நடந்த கைதுகளால் பிரிட்டிஷ் டோரி ஏஜெண்டுகளின் சூழ்ச்சிகள் அம்பலத்துக்கு வந்தன. கலகங்களைத் தூண்டியதுடன் நீடித்து நடந்துகொண்டிருக்க வெடி மருந்துகளும் சப்ளை செய்து வந்தது வெளியாயிற்று. சில ஆங்கிலேய அதிகாரிகள் ஸி. பி யில் கைது செய்யப்பட்டதைக் குறித்து நிருபர் கீழ் வருமாறு எழுதினார்.

## ஆங்கில அதிகாரிகள் சூழ்ச்சி.

“பஞ்சாபில் மிஸ்டர் ஜெங்கின்ஸும், மெக்டோனால்டும் கலகங்களைத் தூண்டிவிட்டதைப் போலவே ஸி. பி. யிலும் அமைதியைக் குலைத்து வகுப்புவாதக் கலவரங்களைத் தூண்டிவிட பல ஆங்கில அதிகாரிகள்

செய்த சூழ்ச்சி கண்டுபிடிக்கப்பட்டு அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இந்த அதிகாரிகள் ஜபல்பூர் ஆயுத கிடங்கிலிருந்து கலகக்காரர்களுக்கு ஆயுதங்கள், தோட்டாக்கள், வெடி மருந்துகள் கொடுத்துக்கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டனர். பிரிட்டிஷ் ஆங்கிலோ இந்தியபோலீஸ் அதிகாரிகளை கைது செய்வதில் மாகாண சர்க்காரும் குறிப்பாக பண்டித ரவி சங்கர சுக்லாவும் வெகு சாமர்த்தியமாய் நடந்துகொண்டனர். லெப்டினட் கர்னல் ஜோன்ஸ், மிஸ்டர் பாவல் வீடுகள் சோதிக்கப்பட்டதில் அறுபதாயிரம் தோட்டாக்கள், ஏராளமான ரைபில்கள். ரிவால்வர்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஜபல்பூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் டாய்மண்ட்ஸ் வீட்டையும் இன்னொரு ஆங்கிலோ இந்திய போலீஸ் இன்ஸ்பெக்டர் வீடும் சோதனையிடப்பட்ட போது ஏராளமான ஆயுதங்களும் சதி சம்பந்தமான தஸ்தாவேஜுகளும் கண்டுபிடிக்கப்பட்டன மேஜர் ஜெனரல் போக்ஸன் வீட்டிலிருந்து இருபத்தி நாலாயிரம் தோட்டாக்களும் இரண்டு ரைபில்களும் இதர யுத்த தளவாடங்களும் கிடைத்தன."

மஹாத்மா காந்தி கொல்லப்பட்டபிறகு சோதனை தீவிரமாக்கப்பட்ட போது பம்பாயிலிருந்து வெளிவரும் "நயாஜமானு" என்ற கம்யூனிஸ்ட் பத்திரிகை சமஸ்தானங்களில் திட்டம் போடப்பட்டு பிறகு கலகங்கள் நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் பரவுகின்றன என்று எழுதிற்று. இந்திய சர்க்கார் அதற்காக வென்றே ஏற்படுத்திய பிரத்தியோக இலாகா பல சமஸ்தானங்களில் சோதனை நடத்திற்று. சென்ற மாதம் இந்தியசர்க்கார் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலை பரத்பூருக்கு அனுப்பி வைத்தது. இரண்டே தினங்களில் அவர் ஆயுத உற்பத்திசாலையையும் ஆயுதங்கள் நிறைந்த கிடங்கையும் கண்டுபிடித்தார். சமஸ்தான கோட்டையை முற்றுகை போட்டபோது அங்கும் ஒரு ஆயுத உற்பத்திசாலையும் கிடங்கும் கண்டு பிடிக்கப்பட்டன. அதில் துப்பாக்கிகள், ஸ்டென் கன்கள், டாமி கன்கள், ஏராளமான வெடிகள், ரிவால்வார்கள் கிடைத்தன.

சமஸ்தானத்தின் பெரிய யந்திரங்கள் அனைத்தும் அமைக்கப்பெற்ற ஆயுத உற்பத்திசாலையொன்று பரத்பூர் போலீஸ் குவார்டரில் கண்டுபிடிக்கப்பட்டது சமஸ்தானமே அதற்கு மின்சார சப்ளையும் செய்து வந்திருக்கிறது ஆயுதகிடங்குகளை சோதனையிட்டபோது ஆயிரக்கணக்கில் பாம்களுடன் பாம் தயாரிக்கும் சாதனங்களும் கிடைத்தன. இந்த ஆயுத கிடங்கின் சாவி எப்பொழுதும் மகாராஜாவிடமே இருந்து வந்தது. மகாராஜாவின் மாளிகை சோதனையிடப்பட்டபோது அங்கும் ஏராளமான ஆயுதங்கள் கிடைத்திருக்கின்றன. ஆயுதங்கள் மறைத்து வைக்க சமஸ்தானத்தின் எல்லா பத்திரமான இடங்களும் உபயோகப்பட்டு வந்தன. சுற்றுப்புற காடுகளில் பெரிய பெரிய ஏரிகள் கட்டப்பட்டு அங்கு வெடி மருந்துகளும் திராவகங்களும் பத்திரப்படுத்திவைக்கப்பட்டிருந்தன. சமஸ்தானத்தில் பிற்போக்கு கும்பலுக்கு இடமளிக்கப் பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. நாச வேலைகளில் ஈடு படக்கூடியவர்களுக்கு இலவச பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

எனவே இந்தியா சுதந்திரத்தை நோக்கி வேகமாய் முன்னேறிக் கொண்டிருக்கையில், சட்டபூர்வமான முறையில் அமைதி குலையாமல் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சித்துக் கொண்டிருக்கையில் டோரிகளின் ஆங்கிலகையாட்கள் இந்தியர்வெங்கும் கலவர சுரங்க வெடிகளைப் பரப்பி வந்தனரென்பதையே மேற்கூறிய சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஆகஸ்டு 15க்கு முன்பே சில இடங்களில் வெடிகள் வெடித்து கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு சிறுபான்மையோரை தகர்க்க ஆரம்பித்து விட்டன. போதாக்குறைக்கு எரியும் கொள்ளிமேல் எண்ணை வார்ப்பதைப்போல் ஜன மாற்றம்வேறு வந்தது இந்திய சரித்திரத்தில் இடம்பெற முடியாமலிருந்த காட்டு மிராண்டித்தனமும் மிருகத்தனமும் இடம் பெற்று விட்டது.

## பரிவர்த்தனைப் பெரும் பாபம்.

ஜூன் 3-ந் தேதி அறிக்கைக்குப்பிறகு அதாவது பிரிவினை ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு இரண்டு டொமினியன்களும் சிறுபான்மையோரை பாதுகாக்க உறுதி கொண்டிருந்தால் பரிவர்த்தனை என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போயிருக்கும். அப்படியே ஒருகால் பரிவர்த்தனை ஒன்றைத் தவிர வேறு வழியில்லாமல் போயிருக்கும் பட்சத்தில் பலாத்காரமுறைகளுக்கு பதிலாக பரிவர்த்தனையின் அவசியத்தை எடுத்துக்காட்டி அவரவர்களின் இஷ்டப்படி நடக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தால் நிலைமை முற்றிலும் வேறாக இருந்திருக்கும். அதைவிட்டு நேர் மாறான நிலைமை ஏற்பட்டு விட்டது.

ஆகஸ்ட் 15-ந்தேதி சுதந்திர கோஷங்கள் வானைப்பிளந்து கொண்டிருக்கையிலேயே திடீரென்று சிறுபான்மையோர் வீட்டுக் கதவுகள் தகர்க்கப் பட்டன. சுவர்கள் இடிந்தன. சொத்துகள் கொள்ளையிடப்பட்டு மானம் பறிக்கப்பட்டது பைத்தியக்காரத்தனம் மட்டுமின்றி நடந்தேறிய காட்டு மிராண்டித் தனத்தைக் கேட்டு சகிக்கவும் கல் நெஞ்சம் வேண்டும்.

(8-ம் பக்கம் பார்க்க.)

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 17—5—'48 திங்கட்கிழமை { இதழ் 17


## மெஜாரிடி மைனாரிடி பாகுபாடு.

பிரிவினையால் ஏற்பட்ட புதிய சூழ்நிலைக்கு தங்களைப் பழக்கப்படுத்திக்கொண்டு சிறுபான்மையோர் விசுவாசமாய் நடந்துகொள்ள வேண்டுமென்று இந்தியா பாகிஸ்தான் டொமினியன்களில் ஓயாமல் பேசப் படுவது எதற்காக? நாட்டைக் கூறுபோட்ட மெஜாரிடி மைனாரிடி பிரச்னை ஒழியும்போது கூடவே பிரிவினையும் தகர்ந்துபோகலாமென்ற பயமா? தேசப் பிரிவினைக்கு முத்திரையிட்ட இந்திய அரசியல் மூளையும் பாகிஸ்தான் கர்த்தாக்களும் ஒருமுகமாக மெஜாரிடி மைனாரிடி பிரச்னையை ஒழித்துக் கட்டத் தயாராயில்லையென்றே தெரிகிறது. அப்படி யாயின் அதை தேசபக்தியுள்ள மனப்பான்மை என்று சொல்லமுடியாது. பூனையின் அதிர்ஷ்டத்தால் உரி அறுந்து விழுந்தது என்று சொல்லுவதைப்போல் அதிகாரத்தின் உரி அறுந்துவிழக் கொடுத்துவைத்த அதிர்ஷ்டசாலிகளின் மனப்பான்மை யாகத்தான் இருக்கமுடியும். மெஜாரிடி, மைனாரிடி என்ற பாகுபாடு இந்தியா பாகிஸ்தான் மக்களிடையே சமுதாயப் பற்று வளர விடுவதில்லை. அதனால் பெரும்பான்மையோர் பெரும்பான்மை மமதையில் சிறுபான்மையோரை ஏளனமாக நினைக்க ஆரம்பித்துவிடுகின்றனர். அதன் பயனாக சிறுபான்மையோர் பீதி அடைவது தான் மிச்சம். பிரிவினைக்குப் பிறகு இரண்டு டொமினியன்களிலும் ஏற்பட்ட மமதைக்கும் பீதிக்கும் எல்லையிருக்கவில்லை. மெஜாரிடி, மைனாரிடி என்ற பாகுபாடு ஒழித்துக்கட்டப்படாதவரை நிலைமை திருந்துவது துர்லபம். சிறுபான்மையோர் விசுவாசத்தை நிரூபித்துக்காட்ட வேண்டுமென்று தங்கு தடை ஏதுமின்றி கோரப்படுகிறது. இந்த கோரிக்கையை பூர்த்தி செய்யும் வகைதான் தெரியவில்லை. சிறுபான்மையோர் சமத்துவமாய் நடத்தப்படுவார்கள். அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படும். ஆனால் அவர்கள் விசுவாசமாய் நடந்துகொள்ள வேண்டியது அவசியம். என்று அடிக்கடி உறுதி கூறப்படுகின்றதேயொழிய சமத்துவ மழை பொழியச்செய்து விசுவாசப்பயிரை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் நடைமுறையில் காட்டப்படுவதில்லை. பெரியவர்கள் நன்மைக்கு அடிகோலுகின்றனர். ஆனால் சிறியவர்கள் தாங்களாகவே நல்லவர்களாகி விடுகின்றனர் என்பது வெளிப்படை. பாகிஸ்தானில் முஸ்லிமல்லாதார் அனைவரும் சிறுபான்மையினராகக் கருதப்படுகின்றனர் ஆனால் இந்தியாவில் முஸ்லிம்கள் மட்டுமே சிறுபான்மையினராக பாவிக்கப்படுகின்றனர். எனவே சிறுபான்மையினரான முஸ்லிம்களிடம் மட்டும் விசுவாசம் கோரப்படுகின்றது. எல்லைப்புரத்தில் பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை மெம்பர்களின் படிச் செலவு நிறுத்தப்படுகின்றதேயொழிய அவர்களை திரும்ப அழைத்து அரசியல் நிர்ணயசபையை தங்கள் சபை என்றும் எல்லைப்புரத்தை தங்கள் தாயகம் என்றும் நினைக்கும்படியான சந்தர்ப்பம் அளிக்கப் படுவதில்லை. சிந்து, பஞ்சாப், கிழக்கு வங்காளத்தின் நிலைமையும் இதுதான். இதே போன்ற நிலைமை இந்தியாவிலும் இருந்துவருகின்றது. சிறுபான்மையினர் என்று தீர்மானிக்கப்பட்டு முஸ்லிம்கள் எல்லா இலாகாக்களிலிருந்தும் வெளியேற்றப் படுகின்றனர். முன்னேற்றம் வாழ்க்கை வசதிகளின் எல்லா கதவுகளையும் அடைத்துவிட்டு விசுவாசமாய் இருக்குப்படி ஆலோசனை கூறப்படுகிறது. விசுவாசமாய் நடந்து கொள்ளவேண்டுமென்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் எந்தநம்பிக்கையைக் கொண்டிருப்பது? பெரும்பான்மையினர் பேச்சளவில் நம்பிக்கை ஊட்டுகின்றனரேயொழிய நடைமுறையில் ஒன்றையும் காணோம். எதிர்காலத்தை நோக்கும்போது அவநம்பிக்கை ஏற்படாமலிருக்க முடியவில்லை. இந்த நிலைமையில் இருக்கும் முஸ்லிம்களின் விசுவாசத்தால் நாட்டிற்கு ஒருவித நன்மையும் ஏற்படமுடியாது. விசுவாசத்தைக் கோரும் பெரும்பான்மை தன்னுடைய கடமைகளையும் உணர்ந்துகொண்டால் அதுவே போதும். அந்நிலையில் முஸ்லிம்களின் விசுவாசத்தால் நாடு பலமடைய முடியும். சமயம் வரும்பொழுது இந்திய முஸல்மான்கள் பெரும்பான்மையினரைவிட சிறந்த விசுவாசிகளாக தங்களை நிரூபித்துக்காட்டுவார்கள் என்பது நிச்சயம். இன்று முஸல்மான்களிடம் மமதை இல்லை. அதிகாரமில்லை. கௌரவமில்லை. சில சரிந்த குடிசைகளும் உடைந்த உள்ளங்களைக் கொண்ட உறவினர்களும்தான் இந்தியாவில் அவர்களுடைய ஆஸ்தி இருப்பினும் முன்னூறு சகாக்களுடன் கிரீஸ் தேசத்தில் லவண்டஸ் சாதித்துக்காட்டியதைவிட அதிகமாய் நாலரை கோடி இந்திய முஸல்மான்கள் இந்தியாவில் சாதித்துக் காட்டப் போகின்றனர் என்பதில் சந்தேகமில்லை.

# சவாலுக்கு பாதுஷாகான் பதில்.

## செஞ்சட்டை கிளர்ச்சி எங்கும் பரவும்.

## பாகிஸ்தானில் ஐந்து ஜாதியா ?

கராச்சி, 9—5—48.

இன்று பாகிஸ்தான் தலை நகரில் அகில பாகிஸ்தான் பீபிள்ஸ்பார்ட்டி கன்வென்ஷன் எல்லைப்புர காந்தி பாதுஷாகான் (கான் அப்துல் கப்பார்கான்) தலைமையில் ஆரம்பமாயிற்று. பாகிஸ்தானில் அதிகாரத்திலிருக்கும் பாஸிஸ்ட் கட்சிக்கும் பொது மக்களின் ஜனநாயக சக்திக்கும் பகிரங்க பலப்பரீட்சை ஆரம்பமாய்விட்டதென்றே சொல்லவேண்டும்.

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் மிஸ்டர் ஜின்னு சில தினங்களுக்கு முன் பெஷாவர் பொதுக்கூட்டத்தில்பேசுகையில் பொதுமக்கள் புதுப்புது அரசியல் கட்சிகளிலிருந்து ஜாக்கிரதையாக விலகியிருந்து திரளவேண்டுமென்றும் பாகிஸ்தான் ஏற்படுவதை எதிர்த்துவந்த சக்திகள் பாகிஸ்தானை பலஹீனப்படுத்தும் முயற்சிகளை இன்னும் கைவிடாமலிருக்கின்றன வென்றும் எச்சரித்தார் மறைமுகமாக அவர் குதாயிகித்மத்கார்களான செஞ்சட்டையினரையும் தாக்கினர்.

எல்லைப்புர தேர்தலில் தோற்கடிக்கப் பட்ட பகடையான பாகிஸ்தான் மந்திரி சர்தார் அப்துல் ரப்நிஷ்தரும் பெஷாவரில் செஞ்சட்டையினரை வன்மையாகத் தாக்கிப் பேசினர். சவுத்ரி கலீ குஸ்ஸமானுக்குப் பிறகு பேசிய எல்லைப் பிரதமர் கான் அப்துல்கையூம்கான் பகிரங்கமாய் செஞ்சட்டையினருக்கு எதிராக யுத்தப்பிரகடனமே செய்து விட்டார். "பாகிஸ்தானில் லீகைத் தவிர வேறு எந்த அரசியல் ஸ்தாபனத்தையும் சகித்துக்கொண்டிருக்க முடியாது. செஞ்சட்டையினர் தங்களுடைய நடவடிக்கைகளைவிட்டு ஸ்தாபனத்தைக் கலைத்து முஸ்லிம் லீகில் சேரவில்லையானல் அவர்களுக்கும் அவர்களுடைய தலைவர் கான் அப்துல் கப்பார் கானுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும் சர்க்கார் தன்னுடைய முழு சக்தியையும் உபயோகித்து அடக்கியே தீரும். அவர்களுடைய கொடி கிள்ளி எறியப்படும்" என்றும் மிரட்டினர்.

இவ்வித மிரட்டல்களுக்கு பெஷாவரில் பதிலளிப்பதைவிட பாகிஸ்தான் தலைநகரும் காயிதே ஆஜம் மிஸ்டர் முஹமத் அலி ஜின்னுவின் இருப்பிடமுமான கராச்சியில் பதிலளிப்பதே சரி என்று பாதுஷாகான் நினைத்தார் போலும். பதிலும் சாதாரண வாய்ப் பேச்சால் அல்ல. செஞ்சட்டையினர் கிளர்ச்சி ஒரு எல்லைப்புர மாகாணத்திலிருப்பதையும் சகிக்காமல் சீறிவிழுந்தவர்கள் பிரமிக்கும் வகையில் பாகிஸ்தானின் எல்லா மாகாணங்களிலும் செஞ்சட்டையினர் கிளர்ச்சி பரப்பப்படுமென்றும் ஆங்காங்கு கிளைகள் ஏற்படுத்தப்படுமென்றும் பீபிள்ஸ் பார்ட்டி கன்வென்ஷனில் செய்த பிரகடனத்தின் மூலம் பாதுஷாகான் பதிலளித்திருக்கிறுர்.

பாதுஷாகான் அமைதியாக ஆனல் தீர்மானமாகப் பேசினர். "மனித வர்க்கத்தின் சேவையே என் வாழ்க்கையின் ஒரே ஒரு லட்சியமாயிருந்திருக்கிறது ஆகையால்தான் நான் என்னை பீபிள்ஸ் பார்ட்டியுடன் இணைத்துக்கொண்டேன்." என்றுர்.

பாதுஷாகான் சர்வதேச நிலைமையையும் விளக்கினர். இன்றைய போக்கால் வல்லரசுகள் உலகத்தை இன்னெரு உலக யுத்தத்தில் இழுத்துவிடுகின்றன. மூன்றுவது யுத்தத்தின் நாசகரமான விளைவுகளிலிருந்து உலகத்தையும் குறிப்பாக நம்முடைய நாட்டையும் காப்பாற்றுவதற்கு சாத்தியமானஎல்லா முயற்சிகளும் செய்யவேண்டியது நம் அனைவருக்கும் கடமை. அத்துடன் உலக பெடரேஷன் அமைக்கவும் பாடுபடவேண்டும். அப்பொழுதுதான் சகலருக்கும் நியாயம் வழங்கமுடியும்" என்று அபிப்பிராயப் பட்டார்.

கான்பரென்ஸில் நூறுக்குமேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர் கிழக்கு வங்கம், மேற்கு பஞ்சாப் பிரதிநிதிகளும் இருந்தனர். பிரத்தியேக அழைப்பின்பேரில் கிழக்கு வங்கத்திலிருந்து ஐந்து ஹிந்து பிரதிநிதிகளும் வந்திருந்தனர். மிஸ்டர் ஜி. எச். சிந்தியும், ஷேக் அப்துல் மஜீதும் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

மிஸ்டர் ஜி. எம் சையத் மஹாநாட்டை திறந்து வைத்தார். சிந்து வாசிகளின் கம்பீரமான கடந்த காலத்தை ஞாபகப்படுத்திய பிறகு இன்றைய மாறுபட்ட சூழ்நிலையிலும் மகத்தானதொரு எதிர்காலத்தில் சிந்து வாசிகள் உறுதிகொண்டிருக்கின்றுர்கள் என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் "பாகிஸ்தானில் சிந்திகள், பட்டாணியர்கள், வங்காளிகள் பலூஜிகள், பஞ்சாபிகளான தனித் தனி ஜாதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஜாதிக்கும் தனித் தனி சரித்திரமும் நாகரீக

மும் வாழ்க்கைத்தரமும் இருந்து வருகிறது. ஒவ்வொரு ஜாதியும் தன்னுடைய சிறந்த பண்பால் பாகிஸ்தானை பலப்படுத்த முடியும். ஆனால் அதற்காக ஒவ்வொரு யூனிட்டும் பூரண சுதந்திரத்துடன் இயங்க வேண்டியதவசியம். தங்கள் இஷ்டப்படி தங்களுடைய எதிர்காலத்தை உருவாக்கும் சந்தர்ப்பம் அவர்களுக்கு இருக்கவேண்டும்" என்று கூறினார்.

கராச்சி அரசியல் வட்டாரங்கள் பீபிள்ஸ் பார்ட்டி கன்வென்ஷனில் அக்கரை கொண்டிருக்கின்றன.

சமீபத்தில் மிஸ்டர் ஜின்னா உத்திரவுப்படி பாகிஸ்தான் முஸ்லிம் லீக் தலைவர் சவுத்ரீ கலீகுஸ்ஸமான் பாகிஸ்தானில் ஒரே அரசியல் கட்சி இருக்க வேண்டுமென்றும் எதிர்கட்சியால் நன்மை ஏற்பட முடியாதென்றும் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

செஞ்சட்டையினர் கிளர்ச்சி அகில பாகிஸ்தானிலும் விஸ்தரிக்கப் போவதாக பிரகடனம் செய்திருப்பதிலிருந்து பாதுஷாகான் சவாலை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் பாகிஸ்தான் சர்வாதிகாரத்துக்கு எதிராக பொது மக்களைத் திரட்ட கங்கணங் கட்டி விட்டதாகவும் தெரிகிறது.

கிழக்கு வங்க முஸ்லிமல்லாதார் பீபிள்ஸ் பார்ட்டியில் சேரத்தயங்குகின்றனர். முஸ்லிம்களிடையே பிளவு உண்டாக்கி சர்க்காரை பலஹீனப் படுத்த முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டப்படலாம் என்று அவர்கள் அஞ்சுகின்றனர். ஆயினும் பாகிஸ்தான் பிரஜைகள் என்ற உரிமையில் தங்கள் சமத்துவ உரிமைகளுக்காக சிறுபான்மையோர் போராட முன் வரவேண்டியது அவசியமென்றும் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றி அரசியல், சமூக புரட்சியில் தங்களுக்குரிய பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் பீபிள்ஸ் பார்ட்டி பிரமுகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

## மேலப்பாளையம்

மேலப்பாளையம் பஞ்சாயத்து போர்டு நிர்வாகக் கூட்டம் போர்டுஆபீசில் 8-5-48 மாலை 5-மணிக்கு ஆலி ஜனப் V. S T. செய்யதுதமீம் சாகிப் தலைமையில் நடைபெற்றது மஹாத்மா காந்திஜீயின் உருவச் சிலையை இவ்வூர் பஞ்சாயத்து போர்டு ஆஸ்பத்திரி, போர்டு முஹம்மதியர் ஸ்கூல், குரிச்சி ஸ்கூல் க்ராம் பவுண்டுகளில் வைக்கவேண்டுமென்றும், ஆஸ்பத்திரியில் ரூ. 2500 மதிப்புள்ள வெங்கலச்சிலையும் மற்ற இரண்டும் சலவைக் கல் சிலைகளாகவும் இருக்க வேண்டுமென தீர்மானிக்கப் பட்டது.

M. K. காதர்மைதீன் சாகிபு.

## அறந்தாங்கி

அறந்தாங்கி தாலுகாவில் சென்ற ஒரு வார காலமாக நெல், அரிசி முதலிய உணவு தானியங்கள் சரிவர சப்ளை செய்யாதபடியால் பொதுஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்றும், காலையிலிருந்து மாலை வரை ரேஷன் கடைகளில் கூட்டமாக நின்றிருந்தும் இரவு வெறுங்கூடையுடன் திரும்புகின்றனர் என்றும், உடனடியாக ஸ்தல அதிகாரிகளும், ஜில்லா சப்ளை ஆபீஸரும் நடவடிக்கை எடுத்து பொதுஜனங்களை பட்டினியிலிருந்து காப்பாற்றுவதற்கு அவசியமான ஏற்பாடுகளை செய்யுமாறு அறந்தாங்கி தாலுகா காங்கிரஸ் கமிட்டி தலைவர் M. கல்யாணசுந்தரம் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

o o o

அறந்தாங்கி தாலுகா 5-வது அரசியல் மகாநாடு நடத்த சிலடமூர் கிராம காங்கிரஸ் கமிட்டியின் கட்டிடத்தில் தாலுகா காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் தலைவர் M. கல்யாண சுந்தரம் தலைமையில் கூடியது. பல கிராம காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகிகளும் வந்திருந்தனர். அரசியல் மகாநாட்டுக்கு 50 பேர் கொண்ட வரவேற்பு கமிட்டி நியமிக்கப்பட்டு தலைவர், உபதலைவர், காரியதரிசி, பொக்கிஷதார் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

"ஆஸாத்"
(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.)

தற்கால அரசியல் அறிவு வளர்ச்சியடைய அவசியம் படிக்கவேண்டும். சிக்கலான அரசியல் உலகத்தில் இன்று 'ஆஸாத்' சமூகத்தை நேரான பாதையில் முன்னேறச் செய்கிறது. சொற்ப காலத்தில் புது அரசியல் உணர்ச்சியை எங்கும் உண்டாக்கியிருப்பதை தாங்கள் கவனித்திருக்கலாம். உங்கள் ஊரில் 'ஆஸாத்' ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுத்துக் கொள்ளுங்கள். இது உங்கள் தேசீயக் கடமை. 'ஆஸாத்' சந்தாதாரர்களாக ரூ. 6. (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர்,
"ஆஸாத்"
கும்பகோணம்.

# காஷ்மீருக்கு ஐக்கிய நாட்டுக் கமிஷன்.

காஷ்மீர் கமிஷனில் அமெரிக்காவை ஐந்தாவது மெம்பராக நியமித்து கமிஷனை பூர்த்தி செய்திருப்பதாக பந்தோபஸ்துசபைத்தலைவர் அறிவித்துவிட்டார். பொதுஜன வாக்கெடுப்பை மேற்பார்வையிடவே இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. கமிஷனுடன் பேச்சுவார்த்தைநடத்தத்தயாரென்றும் ஆனால்பந்தோபஸ்துசபைத் தீர்ப்பை ஏற்க முடியாதென்றும் இந்திய அரசாங்கம் அறிவித்து விட்டது.

பாகிஸ்தான் நிலைமையும் அதுதான். பந்தோபஸ்து சபைத் தீர்ப்பை அதுவும் ஏற்கவில்லை. மலைஜாதியினரையும் பாகிஸ்தானிகளையும் காஷ்மீரிலிருந்து வாபஸ்பெற பாகிஸ்தான் விரும்பவில்லை. இவ்வித எக்கச்சக்கமான நிலைமையிலும் வாக்கெடுப்பு சுதந்திரமாய் நடக்கின்றதா இல்லையா என்பதை மேற்பார்வையிட பந்தோபஸ்து சபைக்கமிஷன் இந்தியாவுக்கு வரத்தான் போகின்றது.

இந்தியாவின் புகார் தெளிவானது. ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்திடம் புகார் சமர்ப்பித்ததற்கு இந்தியாவின் பலஹீனம் காரணமல்ல. உலகசமாதானமே லட்சியமென்று சொல்லிக் கொண்டிருக்கும் சகோதர நாடுகளிடம் தகராறிலுள்ள பிரச்னை சமர்ப்பித்ததற்கு இந்தியாவின் அந்தரங்க சுத்தியே காரணம். காஷ்மீர் பிரச்னையில் ஒருவித சிக்கலும் இருக்கவில்லை.

இஷ்ட பூர்வமாக இந்தியாவுடன் இணைந்தபிறகு சட்டப்பூர்வமாய் காஷ்மீர் இந்தியாவின் அங்கமாய் விட்டது. காஷ்மீரில் மலைஜாதியினர் படையெடுத்து வந்தனர். அண்டை நாடான பாகிஸ்தான், படையெடுப்பாளருக்கு ராணுவ உதவியளித்து சர்வதேச சட்டத்தை மீறிவிட்டது. இந்தியா நினைத்திருந்தால் பாகிஸ்தானை தாக்கியிருக்கலாம். இந்தியா அதை விரும்பவில்லை. ஐக்கிய நாட்டு சமாதானக் காவலாளிகளிடம் புகார் சமர்ப்பித்தது.

தெளிவான பிரச்னையை பந்தோபஸ்துசபை சிக்கலாக்கிவிட்டது. பிரச்னை தீருவதற்குபதிலாக மேலும் மேலும் சிக்கலடைந்து கொண்டேபோயிற்று. வல்லரசுகள் நியாயத்தை புறக்கணித்து விட்டு ஆதிக்க வேட்டையில் இறங்கின. உலகத்தின் மிகப்பெரிய நீதிஸ்தலம் நியாயத்தை புறக்கணித்து விட்டு தவறான வழியில் நடக்க ஆரம்பித்து விட்டதைக் குறித்து இந்தியா மன வேதனை அடையாமல் இருக்கமுடியவில்லை.

நாலைந்து மாத முயற்சிகள், நடவடிக்கைகளுக்குப் பிறகு பந்தோபஸ்து சபை அளித்த தீர்ப்பு இந்தியா, பாகிஸ்தான் இரண்டுக்கும் பிடிக்கவில்லை. ஆயினும் கமிஷன் விஜயம் செய்யும். இரண்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகளுடனும் கலந்து பேசும். உலகத்தின் நந்தவனமென்றழைக்கப்படும் அழகிய காஷ்மீரில் உல்லாசமாய் சுற்றுப் பிரயாணம் செய்து இயற்கை காட்சிகளை பார்த்து ரசித்து விட்டுத்திரும்பிச் செல்லும்.

பாகிஸ்தான் படையெடுப்பாளரை வாபஸ் பெறத் தயாராயில்லை. அவர்கள் வாபஸாகாதவரை அமைதி ஏற்படுவது சாத்தியமில்லை. படையெடுப்பாளரின் நாச வேலைகளால் பீதியடைந்து சமஸ்தானத்தை விட்டு வெளியேறிய மக்கள் திரும்பவும் குடியேற்றப்படாதவரை பொது ஜனவாக்கெடுப்பு என்ற பிரச்னையே எழவில்லை. அதற்கு எவ்வித பந்தோபஸ்தும் செய்யாமல் பொதுஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு மட்டும் பந்தோபஸ்து சபை கமிஷனை அனுப்பி விட்டது.

பந்தோபஸ்துசபை சிருஷ்டித்திருக்கும் கேலிக்கூத்தான நிலைமையைக் குறித்து வருங்கால சரித்திர ஆசிரியன் நையாண்டி செய்யாமலிருக்க முடியாது. 1948-ம் வருஷத்தின் நியாயம் வழங்கும் அறிவாளிகளுக்காக கண்ணீரும் வடிக்கச் செய்வான்.

நல்ல வேளையில் பந்தோபஸ்துசபை ஜனனமெடுக்கவில்லை போலும். அதனிடம் சமர்ப்பிக்கப்பட்ட பிரச்னைகளில் ஒன்றாகிலும் தீரவில்லை. இந்தோனேஷியப் பிரச்னை இதுவரை சீபட்டுக் கிடக்கிறது. பாலஸ்தீனத்தில் ரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருப்பதற்கு பந்தோபஸ்து சபையின் அரசியல் மேதையே காரணம். காஷ்மீர் பிரச்னையில் செய்த தீர்ப்பு பாக்கியிருந்த கொஞ்சநஞ்ச மானத்தையும் கப்பலேத்திவிட்டது.

உலகத்தின் பெரிய நியாயஸ்தலம் உலகம் சிரிக்க இடமளித்திருக்கிறது. பந்தோபஸ்துசபை ஒருபிரச்னையைத் தீர்ப்பதும் மலடிபிள்ளை பெறுவதும் ஒன்றுதான். அப்படியே தீர்ப்பளித்து விட்டாலோ அதன் லட்சணத்தை சொல்ல வேண்டியதேயில்லை. காகித நடவடிக்கையுடன் சரி. யாரும்அதைப்பற்றி கவலைப்படுவதில்லை. அதனால் இயற்கையாகவேஐரோப்பிய, ஆசிய கண்டங்களில் பொதுவாக அதிருப்தி ஏற்பட்டு வருகிறது. ஆதிக்கவேட்டையில் பலப்பரீட்சை மும்மரமாய் நடந்து கொண்டிருக்கிறது. வரப்போகும் யுத்தத்தின் அறிகுறியே இன்றைய நிலைமை.

சமத்துவ, ஜனநாயக அடிப்படைகளில் உலக சமாதான திட்டங்கள் வகுக்கப்படாவிட்டால் ஐக்கிய நாட்டு ஸ்தாபனமும் காலஞ் சென்ற லீக் ஆப் நேஷன்ஸ் அடைந்த கதியையே அடைய நேரிடும் என்று உலக மஹாயுத்த முடிவில் வல்லரசுகளை பண்டித ஜவஹர்லால் நேரு எச்சரித்திருந்தார். பண்டித நேருவின் வார்த்தைகள் உண்மையாய் விட்டன. உலகம் இரண்டு கோஷ்டிகளாக இன்று பிரிந்து விட்டது. எந்த நிமிஷத்தில் வெடிக்கும் என்று சொல்லுவதற்கில்லை. உலகம் திரும்பவும் அழிவுப்படுகுழியில் விழப்போகின்றது.

இந்த நிலைமையில் ஐக்கிய நாட்டுக் கமிஷன் நன்மை பயக்கக்கூடிய விதத்தில் ஏதாவது செய்யக் கூடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆகையால் தங்களுடைய வியாதிக்கு மருந்து அமெரிக்கா, பிரிட்டன் அல்லது ரஷ்யா, யுக்ரேன் நாடுகளிடம் இல்லையென்பதை இந்தியா பாகிஸ்தான் டொமினியன்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். காஷ்மீர் பிரச்னையை இந்தியாவும் பாகிஸ்தானுமே தீர்க்கமுடியும். கலந்து பேசியும் தீர்க்கப்படலாம். அல்லது பலத்தைக் கொண்டும் தீர்த்துக்கொள்ளலாம். லேக்ஸக்ஸஸ் பேர் வழிகளின் சுயநலத்தை அனுபவத்தில் பார்த்தாயிற்று. அவர்களிடம் நியாயத்தை எதிர்பார்ப்பது வீண்.

இன்றைய நிலைமையில் இந்திய சர்க்கார் காஷ்மீரில் தீவிர நடவடிக்கை யெடுக்கவேண்டும். எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ படையெடுப்பாளரை விரட்டியடித்து அமைதியை நிலைநாட்டவேண்டும். தன்னுடைய போக்கால் நியாயமான நடவடிக்கைகளை எதிர்பார்க்கும் உரிமையை பாகிஸ்தான் இழந்து விட்டிருந்த போதிலும் இந்தியா தன்னுடைய வாக்குறுதியை மீறப்போவதில்லை. அமைதி ஏற்பட்ட பிறகு இந்தியா பொதுஜன வாக்கெடுப்பு நடத்த தயாராய் இருக்கவேண்டும் காஷ்மீரத்திலுள்ள வயது வந்தவர்களுக்கெல்லாம் தங்கள் விதியை நிர்ணயிக்கும் உரிமையும் சந்தர்ப்பமும் வழங்கப்படவேண்டும்.

பாரபட்சமற்ற முறையில் வாக்கெடுப்பு நடத்த காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லாவும் சம்மதித்திருக்கிறார். ஆகையால் அப்துல்லா சர்க்காருக்கு சாத்தியமான எல்லா துறைகளிலும் உதவி செய்யவேண்டியது இந்திய சர்க்காரின் கடமை, கமிஷன் நடவடிக்கைகளை இந்தியா லட்சியம் செய்யவேண்டியதில்லை. அதிதிகளை வரவேற்பதில் இந்தியா பிரசித்தி பெற்றிருக்கிறது. இந்தியாவுக்கு விஜயம் செய்யும் காஷ்மீர் கமிஷன் மெம்பர்களையும் அம்முறையில் இந்தியா நிச்சயம் வரவேற்கும். பிரச்னைக்குப் பரிகாரம் காணுவதில் உதவி செய்து ஏதோ சாதித்துவிடப் போகிறார்கள் என்பதற்காக இல்லாவிட்டாலும் விருந்தினரை உபசரிக்கும் தன்னுடைய பண்டைய பண்பாட்டை அனுசரித்து இந்தியா அவர்களுக்கு நல்வரவு கூறும்.

---

(3-ம் பக்க தொடர்ச்சி)

லட்சக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். கவுரவத்துக்குரிய தலைவர்கள், இரக்கப்படத் தகுந்த குழந்தைகள், நோயாளிகள், மரியாதைக்குரிய மிருதுவான பெண்கள், தாய் தகப்பனை இழந்து தவித்த குழந்தைகளைப் பார்த்தும் ரத்தவெறி வெட்கப்படவில்லை. நிரபராதிக் குழந்தைகளின் நெஞ்சங்களைப் பிளந்து மனித ரூபத்திலிருந்த மிருகங்களின் ஈட்டிகள் விளையாடின கற்புக்கரசிகளை கற்பழித்து இன்பமனுபவிக்கப்பட்டது.

பண்டித சுந்தர்லால் பாகிஸ்தான், கிழக்கு பஞ்சாப், டில்லி முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்த பிறகு வெளியிட்ட அறிக்கையில் கீழ் வருமாறு கூறுகிறார்.

“ஜனப் பரிவர்த்தனை மனிதவர்க்கத்துக்கு இழைக்கப்பட்ட பெரும் பாபமாகும். இதைவிட பெரிய பாபம் மானிட சரித்திரத்திலேயே பார்க்கமுடியாது. இதற்கு யார் பொறுப்பாளி என்று சொல்லுவது கஷ்டம் தான். ஆயினும் எல்லா கட்சிகளிலுமுள்ள முன்னணித்தலைவர்களும் பிரிட்டிஷ் அரசியல் லீடர்களும் அடங்கிய ஒரு டஜன் ஆசாமிகள் மீது பாரபட்சமற்ற நியாய ஸ்தலத்தில் அகதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

[பாக்கி அடுத்த இதழில்]


## வரவேற்கிறோம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய, ஜனநாயக. சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிறோம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். இதர விபரங்கள் தபால் மூலம்.

மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.

# —: புனர் வாழ்க்கை. :—

(o)

## பாகிஸ்தானுக்குப் பிறகு

வகுப்புவாதப் பிரச்னை தீர பிரிவினை ஒன்றே சிறந்த பரிகாரமென்று ஏழைப்பாமர முஸ்லிம் பொது மக்களிடையே தீவிரமாய் பிரசாரம் செய்து கொண்டே லீக் தலைவர்கள் பாகிஸ்தான் பூலோக சுவர்க்கத்துக்கு அஸ்திவாரம் போட்டார்கள். ஆனால் பாகிஸ்தான் ஏற்பட்டு சில தினங்களுக்குள்ளேயே பிரிவினை வகுப்புக் கொலையில் முடிந்திருப்பது நிரூபணமாகிவிட்டது. லட்சக் கணக்கில் நிரபராதிகள் கொள்ளையடிக்கப்பட்டனர். அகவுரவத்துக்கு ஆளாயினர். கொல்லப்பட்டனர். கோடிக்கணக்கில் வீடுகளையிழந்து பரதேசிகளாய், பிச்சைக்காரர்களாய் பசிக்கும் பட்டினிக்கும் பலியாய்விட்டனர்.

நாட்டின் பொருளாதாரம் தகர்ந்தது. நிர்மாண முன்னேற்ற திட்டங்கள் சிதறுண்டன. மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குப் பதிலாக சக்தி அனைத்தையும் தங்கள் சகோதரர்கள் கையினாலேயே கொல்லப்படும் மக்களைக் காப்பாற்றுவதில் செலவிட வேண்டியதாயிற்று. கொலை, கொள்ளை, பீதி, பயங்கரம் தேசத்தில் தாண்டவமாடின. எல்லையற்ற துன்பங்கள், கணக்கிலடங்கா நஷ்டங்களுக்குப் பிறகும், பாகிஸ்தான் அமைந்தபின்னும்கூட வகுப்புப் பிரச்னை தீர்ந்துவிட்டதா? அல்லது பிரிவினையால் எழுந்த பல பிரச்னைகளுக்கு பரிகாரமே இல்லாமல் போய்விட்டதா?

### இரு சமுதாய விசித்திரம்

முஸ்லிம்கள் முற்றிலும் வேறுபட்ட சமுதாயம். அவர்களுடைய மதம், கலாச்சாரம், நாகரீகம் பாஷை வேறு. லட்சியம், கொடி, அரசியல் ஸ்தாபனம் எல்லாமே வேறு. இந்தியர்களுக்கும் அவர்களுக்குமிடையே ஒன்றுபட்ட அம்சமே கிடையாது என்பதே முஸ்லிம் லீக் வாதமாக இருந்தது.

பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு லீக் லீடர்களே தங்களுடைய வாதத்தைப் பொய்ப்பித்து வருவதிலிருந்தே தங்கள் மோசடியை அம்பலப்படுத்தியும் வருகின்றனர். ஏழைப் பாமர முஸ்லிம்களை சிக்கவைக்கப் பரப்பியிருந்த அழகான வலை மனித வர்க்கத்துக்கு இழைக்கப்பட்ட பெருத்த தீங்கு என்பதை எடுத்துக்காட்டியும் விட்டனர். பிரிவினைக்குப் பிறகு இந்தியாவிலுள்ள ஹிந்து முஸ்லிம்கள் ஒரு சமுதாயமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாகிஸ்தான் முஸ்லிம்களும் இந்திய முஸல்மான்களும் ஒரு சமுதாயமல்ல என்று பாகிஸ்தான் ஸ்தாபகர்களே வாய்விட்டு சொல்லுவதுதான் காலத்தின் விசித்திரமான போக்கு.

மிஸ்டர் ஜின்னா இந்திய, பாகிஸ்தான் முஸ்லிம்களின் லட்சியங்கள் வேறுபட்டவை என்று அறிவித்து விட்டார். அழைப்பில்லாத விருந்தினராக இந்திய முஸல்மான்கள் பாகிஸ்தானுக்கு வரவேண்டாம் என்று நவாப் ஜாதா எச்சரித்தார். 'மத அடிப்படையில் சமுதாயம்' என்ற கோஷம் ஓய்ந்துவிட்டது. 'இஸ்லாமிய சகோதரத்துவம் லௌகீக எல்லைகளுக்கு அப்பாலுள்ளது' என்ற தத்துவம் பாகிஸ்தான் எல்லையைக் கடக்கமுடியவில்லை. இந்திய முஸல்மான்களுக்கு புகலிடமாய் இருப்பதற்குப் பதிலாக பாகிஸ்தான் பெரும் இடைஞ்சலாகவே அமைந்துவிட்டது.

பாகிஸ்தான் ஏற்படுவதற்கு முன்னால் லீக் லீடர்களை அணுகி, பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு இந்திய முஸ்லிம்களின் நிலை என்ன? என்று யாராவதுகேட்டுவிட்டால், உனக்கு சர்வ தேசீய அரசியல் வாடைகூடத் தெரியாது. பாகிஸ்தானுக்குப் பிறகு இந்திய முஸ்லிம்கள் பிரச்னை சர்வ தேசீயப்பிரச்னையாக மாறிவிடும். ஒரு அரசாங்கம் தன்னிடமுள்ள சிறுபான்மையோரை அலட்சியம் செய்துவிடமுடியுமா? அப்படியே இங்கு முஸ்லிம்களுக்கு தீங்கிழைக்கப்பட்டால் பாகிஸ்தானிலுள்ள சிறுபான்மையோர் எங்கு போவார்கள்? இதுகூட உனக்குத் தெரியவில்லையே?" என்று மிகவும் எளக்காரமான முறையில் பதிலளித்து வந்தார்கள்.

ஆனால் இன்று! எந்த ஒரு லீக் லீடரும் தன்னை அன்னியப் பிரஜை யென்று சொல்லிக்கொள்ளத் தயாராயில்லை. பாகிஸ்தான் பிரஜையென்று சொல்லிக்கொள்வது ஒரு புறமிருக்க இந்தியா பாகிஸ்தான் யுத்தம் மூண்டால் இந்தியாவுடன் சேர்ந்து பாகிஸ்தானை எதிர்த்து முறியடிப்பதில் கடைசி துளி ரத்தம் வரை சிந்தப் போவதாக ஆகஸ்ட் 15-ந்தேதி உதயத்திலிருந்து லீக் லீடர்கள் தொண்டை கிழியக் கத்தி வருகின்றனர். அடுத்தது பாகிஸ்தானிலுள்ள சிறுபான்மையோர் விஷயம். அந்த பேச்சுக்கே இனி இடமில்லை. மேற்கு பாகிஸ்தானிலிருந்து சிறுபான்மையோர் அனைவரும் வெளியேறிவிட்டனர்.

பாக்கியுள்ள ஒரு சிலரையும் வெளியேற்றிக் கொண்டு வர முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. கிழக்கு பாகிஸ்தானைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. நிலைத்திருந்தாலே போதும் என்று உயிருக்குப் போராட வேண்டிய நிலைமையில் இருந்து வருகிறது.

பாகிஸ்தான் இந்திய முஸல்மான்களுக்கு பெரும் அபாயமாக அமைந்திருப்பது சர்ச்சைக்கு இடமில்லாத உண்மையாகிவிட்டது. பாகிஸ்தானுக்காக பாடுபட்ட லீக் லீடர்களே இன்று அதைத் தகர்க்க முயற்சிக்கின்றனர். இந்திய முஸல்மான்கள் பாகிஸ்தானுக்காகபெருமளவுஇழந்தனர். பாகிஸ்தானை ஆதரித்து தங்கள்கால்களை தாங்களேவெட்டிக்கொண்டனர். சட்டசபைகள், உத்தியோகங்களில் இருந்த சலுகை, பாதுகாப்பு இழந்தது ஒருபுறமிருக்க பாகிஸ்தான் கானல் நீரை நம்பி மெஜாரிடி சமூகத்தினரின் நம்பிக்கையையும் இழந்துவிட்டனர். தாங்கள் மூட்டிய வெறுப்புத் தீயின் நடுவே இன்று தாங்களே அகப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்

பல நூற்றுண்டுகளாக வாழ்ந்துவந்த அதே நாட்டில் அதே மக்களுக்குள் தன்னை அன்னியன் என்று முஸ்லிம் நினைக்கிறுன். அவனுடைய உயிர், உடைமை. கவுரவத்துக்கு அபாயம் ஏற்பட்டிருப்பதைப் போன்றதொரு உணர்ச்சி அவனை வாட்டுகின்றது. ஏங்குகிறுன்.

அவனுடைய ஏக்கத்தைப்போக்க இன்றைக்கும் சில லீக் லீடர்கள் தவருன வழிகளைக் கையாளுகின்றுர்கள். "பாகிஸ்தான் ஏற்பட்டதால் இந்திய முஸல்மான்கள் நஷ்டமடைந்தது உண்மைதான். ஆயினும் வேறு வழியிருக்கவில்லை. பாகிஸ்தான் ஏற்படாமலிருந்திருந்தால் இந்தியா முழுவதும் ஹிந்துக்களின் ஆட்சி ஏற்பட்டிருக்கும். இன்றைக்குக் குறைந்த பட்சம் ஐந்து கோடி முஸ்லிம்களாவது சுதந்திரமாய் இருக்கிறுர்கள். அவர்களுடைய ஆட்சி நடந்துவருகிறது. ஐந்து கோடி முஸல்மான்கள் தங்கள் சகோதரர்களுக்காக தியாகம் செய்ததைக் குறித்து ஏன் வருந்தவேண்டும்?" என்று ஆறுதல் கூறுகின்றனர். பாகிஸ்தான் ஏற்படாமலிருந்தால் இந்திய முஸல்மான்கள் அடிமைகளாகவே இருந்திருப்பர் என்ற அர்த்தமற்ற வாதத்துக்கு அடிக்கடி பதிலளிக்கப்பட்டுள்ளது. அதை உணர சில உண்மைகள் தெரிந்துகொள்ளவேண்டியதவசியம்.

1. ஐக்கிய இந்தியாவில் பத்து கோடி முஸ்லிம்கள் தங்களுக்குள்ள சலுகையுடன் மத்திய அரசாங்கத்தில் மூன்றில் ஒரு பங்காக இருந்திருப்பர். சுதந்திர இந்திய பிரச்னைகளில் நூற்றுக்கு தொண்ணூற்றென்பது வகுப்புவாதமற்றவையாயிருக்கையில் மத்திய சட்டசபையில் மூன்றில் ஒரு பங்காக இருக்கும் சிறுபான்மையினரை பலஹீனமானவர்கள் என்று நினைக்க முடியாது.

2. சிந்து, எல்லைப்புரம், பலூசிஸ்தானுடன் பூரா வங்காளமும், பூரா பஞ்சாபும் முஸ்லிம் மெஜாரிடி ஆட்சியின் கீழ் இருந்திருக்கும், மாகாணங்கள் உள்நாட்டு விவகாரங்களில் பூரண சுதந்திரத்துடன் இயங்கியிருக்கும். மத்திய அரசாங்கத்தின் மேற்பார்வை பெயரளவில்தான் இருந்திருக்கும். முஸ்லிம் மெஜாரிடி மாகாணங்களுடன் ஹைதராபாத், போபால், பஹாவல்பூர் போன்ற முஸ்லிம் சமஸ்தானங்களின் தொகுதியும் உருவாயிருக்கும். வெளிநாட்டுக்கொள்கை, பாதுகாப்பு, போக்கு வரத்து மட்டும் மத்திய அரசாங்கத்தினிடம் இருந்திருக்கும். முஸ்லிம்களின் இவ்வளவு சக்தியுள்ள முஸ்லிம் தொகுதியின் நிர்வாகத்தில் மூன்றில் ஒரு பங்கு முஸ்லிம்களைக்கொண்ட மத்திய அரசாங்கம் வகுப்புவாத அடிப்படையில் தலையிடுவது சாத்தியமாக இருந்திருக்காது. மேலும் மூன்று தடவைகளுக்கு ஒரு முறை குடியரசுத் தலைவரும் பிரதம சேனாதிபதியும் முஸ்லிம்கள் நியமிக்கப்படவேண்டும் என்று சட்டமியற்றியிருக்கவும் முடியும்.

3. பிரிவினைக்குப் பிறகு அடித்த வகுப்புவாதச் சூராவளி ஐக்கியஇந்தியாவில் அடித்திருக்கமுடியாது. வெள்ளையர்கள் பிரித்தாளும் சூழ்ச்சியுடன் வேற்றுமைகளும் மறைந்து சௌஜன்யமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கமுடியும். ஐக்கிய இந்தியாவில் ஒரு வகுப்பாரின் முன்னேற்றத்தில் இன்னொரு வகுப்பாரின் முன்னேற்றமும், ஒருவனுடைய நஷ்டத்துடன் இன்னொருவனுடைய நஷ்டமும் பிணைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்திய பாமரனுக்கு சுலபமாய் உணர்த்தியிருக்கலாம். வகுப்பு போராட்டங்கள், வர்க்கப் போராட்டங்களாக மாறியிருக்கும். இந்தியாவின் எல்லா நகரங்கள், கிராமங்களிலும் முஸ்லிம்கள் கண்ணியமானதொரு ஸ்தானத்தை வகித்திருப்பர், மற்றவர்களைப் போலவே முன்னேற்ற, நிர்மாண உபாயங்கள் அவர்களுக்கும் கிடைத்திருக்கும்.

## பிரிவினையால் கண்ட பலனென்ன?

லீக் தலைவர்கள் கனவு கண்டுவந்த பாகிஸ்தான் கிடைக்கவில்லை என்பதுமுதல்விஷயம். இன்றையபாகிஸ்தான் மிஸ்டர் ஜின்னு சொல்படி செல்லரித்த பாகிஸ்தானேயாகும், ஸில்ஹெட் தவிர பூரா அஸ்ஸாமும் பாதி வங்காளமும், பாதி பாஞ்சாலமும் பாகிஸ்தானில் சேர்க்கப்படவில்லை. உண்மையில் இந்தியாவின்

சில ஜில்லாக்கள் மட்டுமே பாகிஸ்தானாக அமைந்திருக்கின்றன. இந்தியாவுடன் ஒத்திட்டுப் பார்க்கையில் நிலப் பரப்பில் $\frac{1}{8}$ மூலப் பொருள்களில் $\frac{1}{35}$ வியாபாரம், உற்பத்தியில் $\frac{1}{50}$ தான் பாகிஸ்தான்.

கிழக்கு வங்க பாதுகாப்புப் பிரச்னை சிக்கலானது மட்டுமின்றி சாத்தியமற்றதுமாகும். மேற்கு பாகிஸ்தான் அங்கம் இரண்டு பெரிய நாடுகளான இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் நடுவே இருப்பதால் பாதுகாப்பு விஷயத்தில் பாகிஸ்தான் இரண்டிலொன்றின் தயவை நாடாமலிருக்க முடியாது. இன்றைய சிக்கலான சர்வ தேசீய அரசியல் போக்கில் பாகிஸ்தானில் சேர்ந்துவிட்டதெல்லாம் பத்திரமாயிருந்துவிடுமென்று நினைப்பது பைத்தியக்காரத்தனமாகும்.

தவிர பாகிஸ்தானுக்கு கிடைத்திருக்கும் எல்லைப்புரம், சிந்து, வங்காளம், பஞ்சாப் மாகாணங்களில் மாகாண வேற்றுமை ஏற்கெனவே உண்டு. இன்றுள்ள பாஷைத்தகராறு அதை இன்னும் அதிகமாக்கிவிட்டது. உள்நாட்டுக் குழப்பங்களிலிருந்து பாகிஸ்தான் விமோசனமடைவதும் சாத்தியமில்லை. எல்லைப்புரத்தில் பட்டாணிஸ்தான் கிளர்ச்சி வலுத்து வருகிறது. சிந்து சிந்திகளுக்கே; வங்கம் வங்காளிகளுக்கே என்ற கோஷங்களின் நடுவே பஞ்சாபிகள் பாகிஸ்தான் தங்களுக்கே சொந்தம் என்று நினைக்கின்றனர்.

பாகிஸ்தான், தங்கள் சக்தியைக் கொண்டு வாங்கிவிட்டதாக இன்னும் சில லீக் பிரமுகர்கள் தவறாக நினைத்துக்கொண்டிருப்பதுதான் வேடிக்கை. காங்கிரஸையும், தேசீய முஸல்மான்களையும் குறை கூறி ஹிந்துக்களுக்கு எதிராக மத உணர்ச்சியைத் தூண்டிவிட்டதைத்தவிர பாகிஸ்தான் லட்சிய சித்திக்காக எவ்வித தியாகமும் தாங்கள் செய்யவில்லை என்பதை அவர்கள் உணருவதில்லை. போகிற போக்கில் இந்தியாவின் ஐக்கியத்தைக் குலைக்க வெள்ளையர்கள் செய்த பெரும் சூழ்ச்சியே பாகிஸ்தான். திரும்பி வருவதற்காக பாகிஸ்தான் என்ற பெயரில் கொல்லைக் கதவு திறந்துவைத்துவிட்டு வெள்ளையர்கள் சென்றிருக்கின்றனர். வெள்ளையர்களின் துர்ப்போதனைக்கு இலக்காய் பிடிவாதமாய் இருந்ததைத் தவிர முஸ்லிம் லீக் சாதித்தது ஒன்றுமில்லை.

மிஸ்டர் ஜின்னாவின் அரசியலும் கள்ள மார்க்கெட் வியாபாரமும் ஒன்று. மற்றவர்களின் அவசியத்தை தனக்குச் சாதகமாய் பிரயோஜனப்படுத்திக் கொள்வதில் கள்ள மார்க்கெட்காரர்கள் தயங்குவதில்லை. பிரிட்டிஷாருடன் சேர்ந்துகொண்டு மிஸ்டர் ஜின்னா காங்கிரஸை அடிமை அல்லது பிரிவினை என்ற நெருக்கடியான கட்டத்துக்குள்ளாக்கி விட்டார். பாகிஸ்தான் லீக் அரசியலின் வெற்றியல்ல. அரசியல் கள்ள மார்க்கெட்டின் வெற்றியேயாகும். தியாகம், சேவை, அன்பு, சகிப்புத்தன்மை அடிப்படையில் பாகிஸ்தான் அமையவில்லை. கள்ள மார்க்கெட் முதலாளி கிராக்கியின் பணத்தைக் தட்டிக் கொள்வதைப் போலத்தான் பாகிஸ்தான் வாங்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் ஏற்படுவதற்கு பஞ்சாப் முதலாளிகளின் ஆதிக்க வேட்டை உணர்ச்சியும் காரணம். இந்திய முஸல்மான்களின் அஸ்திகளின்மீது தங்கள் பேராசைக் கோட்டைக்கு அஸ்திவாரம் போட அவர்கள் விரும்பினர். அதிகாரம், உத்தியோகம், பணப்பேராசையில் இதர மாகாண முஸ்லிம் முதலாளிகளும் அவர்களுடன் சேர்ந்துகொண்டனர். மதத்தின் பெயரால் தூண்டிவிட்டு வெறுப்பு துவேஷத்தின் படுகுழியில் தேசம் பூராவிலுமுள்ள ஏழைப் பாமர முஸ்லிம்களை தள்ளிவிட்டனர். மத உணர்ச்சியில் உணர்விழந்துவிட்ட பாமரர்கள் கண்மூடித்தனமாய் சில சுயநலக்கார பதவிமோகக்காரர்களின் கேவலமான சூழ்ச்சிகளுக்கு இலக்காகி முடிவில் ஏங்கியிருந்துவிட்டனர்.

லீக் தலைவர்கள் இந்திய முஸல்மான்களுக்காக வடித்ததெல்லாம் நீலிக்கண்ணீர் என்பது பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு வெட்டவெளிச்சமாகிவிட்டது. மிஸ்டர்ஜின்னா கவர்னர் ஜெனரலாய் பம்பாயைவிட்டுச் சென்றுவிட்டார். நவாப் ஜாதா பிரதம மந்திரியாய் ஐக்கிய மாகாணத்தைத் துறந்தார். சவுத்ரி கலி குஸ்ஸமானும், மஹ்மூதாபாத் ராஜாவும் புலியைக்கண்டு கிலிபிடித்து ஓடுவதைப்போல் திரும்பியும் பார்க்காமல் தலை தெறிக்க பாகிஸ்தானுக்குள் ஓடி மூச்சு விட்டனர். அதன் பிறகு ஒருவருக்குப் பின் ஒருவராய் கிளம்பினர். கடைசியில் சேட் அப்துல் சத்தார் கூட மோசம் செய்துவிட்டார். அநேகர் போய் ஆயிற்று. இன்னும் அநேகர் மூட்டை கட்டித் தயாராய் இருக்கின்றனர்.

ஆபத்துக்கு அழைப்பு அனுப்பி, வருவித்து, மோசம் செய்துவிட்டு ஓடும் லீக் தலைவர்களை பிடித்து நிறுத்தி "எங்களையாரிடம் ஒப்படைத்து விட்டுப் போகின்றீர்கள்? உங்கள் வியர்வைக்குப் பதில் நம்முடைய ரத்தத்தைக் கொடுப்போம் என்று நேற்று வரை அளித்துவந்த வாக்குறுதிகளை எல்லாம் எந்தக் காற்றில் பறக்கவிட்டீர்கள். ஆபத்தில் உதவாத சுயநலக்காரர்களே! பதில் கூறிவிட்டு நீங்கள் எந்த நரகத்துக்கு வேண்டுமானாலும் போங்கள்" என்று முஸ்லிம்கள் கேட்டிருந்தால்!

## இனி என்ன செய்யவேண்டும்

நடந்தது நடந்தேறிவிட்டது. இந்திய முஸல்மான்கள் இனி என்ன செய்யவேண்டும்? என்பதே இன்றையபிரச்னை உயிர், உடமை, கவுரவத்துக்கு அபாயம் ஏற்பட்டுவிட்டது. பாஷை, கலாச்சாரம் உருக்குலைந்து வருகின்றன. துரோகிகள் என்று அழைக்கப்படுகிறோம். தலைவர்கள் செய்த மோசத்தால் சிதறிவிட்டோம். பாகிஸ்தான் மீதிருந்த நம்பிக்கையும் அற்று நிராதாரவாய் நிற்கிறோம்.

ஹிந்துக்களிடையே வளர்ந்து வரும் வகுப்புவாதம் காங்கிரஸையும் ஆக்ரமித்து வருகிறது. மஹாத்மாகாந்தியையும் இழந்தோம். பண்டித நேருவைப் போன்ற சமதர்ம வாதிகளின் கைகளும் பலஹீனமடைந்து வருகின்றன. எவ்வளவோ முயன்றும் ஹிந்துக்களிடையே ஏற்பட்டுவிட்ட வெறுப்பை அவரால் போக்க முடியவில்லை. நிலைமை மிகவும் நெருக்கடியானதுதான்.

ஆயினும் முஸ்லிம்கள் நம்பிக்கை இழக்கவேண்டியதில்லை. இச்சமயத்தில் சகிப்புத் தன்மையும், தீர்க்க தரிசனமும் அவசியம் விமோசன வழிகள் முஸ்லிம்களுக்காக திறந்தேயிருக்கின்றன. சுதந்திர இந்திய நிர்மாணத்திலும் முன்னேற்றத்திலும் பெரும் பணியாற்ற இன்றைக்கும் முஸ்லிம்களுக்கு சந்தர்ப்பம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் முதலில், நடுவே புகுத்தப்பட்ட இயற்கைக்கு மாறான உணர்ச்சிகளை விட்டு தங்கள் பண்பாட்டையும், புராதனப் பெருமையையும் முஸ்லிம்கள் எண்ணிப் பார்க்க வேண்டியதவசியம்.

தரித்திரம் பிடித்த ஆங்கில ஆட்சியின் மறைவுக்குப் பிறகு வகுப்புவாத கோஷ்டி அரசியலுக்கு இந்தியாவில் இடமில்லை என்பதை முஸ்லீம்கள் முதலில் நன்றாய் உணர்ந்துகொள்ள வேண்டும். மற்றவர்களை முந்திக்கொண்டு எல்லா வகுப்புவாத அரசியல் ஸ்தாபனங்களையும் முஸ்லிம்கள் கலைத்துவிட வேண்டும். குறிப்பாக முஸ்லிம் லீக்கும் அதன் வேற்றுமைப் பிரசாரத்தையும் ஆழக்குழிதோண்டிப் புதைக்கவேண்டும். சேவை செய்வது ஒரு புறமிருக்க முஸ்லிம்கள் பூண்டற்றுப் போகும்படிச் செய்ய வகுப்புவாத ஸ்தாபனங்கள் ஒன்றே போதும்.

1. மத அடிப்படையில் அரசியலில்தனித்திருக்க முடியாதென்பதை உணர்ந்து சாத்தியமான சகல துறைகளிலும் இந்தியாவுக்கு சேவை செய்வதை தங்கள் லட்சியமாய் கொள்ளவேண்டும்.

2. சுதந்திர இந்தியாவில் இனி ஹிந்து முஸ்லிம்கள் இருவரின் எதிர்காலமும் ஒன்றுதான் என்பதை உணர்ந்து முஸ்லிம்கள் காங்கிரஸில் பெருமளவில் சேரவேண்டும். மற்ற கட்சிகளைவிட செல்வாக்குள்ளதும் முற்போக்கு நோக்கங்களைக் கொண்டதுமான கட்சி காங்கிரஸே யாகும் நாட்டின்பொருளாதாரப் பிரச்னைகளைத்தீர்க்க முற்போக்காளர்கள் அனைவரும் ஒன்றாய்க் கூடி வேலை செய்யவேண்டியதவசியம். காங்கிரஸை இனி புரட்சி ஸ்தாபனமாக மாற்றியாகவேண்டும். அந்த வேலையில் முஸ்லிம்கள் மற்றவர்களைவிட எவ்விதத்திலும் பின்னடைந்துவிடக்கூடாது. இன்று முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர்ந்து அதன் வகுப்பு வாதமற்ற சில தலைவர்களின் கைகளைப் பலப்படுத்தத் தவறினால் ஹிந்து பாஸிஸ சக்தி காங்கிரஸை தோற்கடித்து விடக்கூடும் அதனால் முஸ்லிம்களே பாதிக்கப்படுவர்,

3. ஹிந்து முஸ்லிம்களிடையே உள்ள மறைந்துவிடக்கூடிய சில்லறை பேதங்களை வெள்ளையர்கள் அரும்பாடுபட்டு நிலை நிறுத்திவந்தனர். ஹிந்து முஸ்லிம்கள் ஒன்றுபடாமலிருக்கவேண்டுமென்பதே அவர்களின் நோக்கம்- துவேஷத்துக்கு மதத்துடன் எவ்வித சம்மந்தமுமிருக்கவில்லை. ஆயினும் தனித்தொகுதி தேர்தல்களில் வெற்றியடைய வகுப்புவாதத்தலைவர்கள் துவேஷத்தை பிரயோஜனப்படுத்திக் கொண்டனர் மதம் இன்னதென்று உணராத முஸ்லிம் பகிரங்கமாய் பசுவை பலியிடாதவரை முஸ்லிமாயிருக்க முடியாதென நினைத்தான். அவனைப்போன்ற ஹிந்து ஒருவன் மசூதிக்குமுன் மேளம்தட்டாதவரை ஹிந்து தர்மத்தைக்காக்க முடியாதென எண்ணினான்.

உண்மையில் வெள்ளை ஆட்சியில் இஸ்லாமிய தர்மமோ, ஹிந்து தர்மமோ கவுரவிக்கப்படவில்லை. ஏகாதிபத்திய அடக்குமுறை தர்மமே நம் தலைமீது சுமத்தப்பட்டிருந்தது. அதைக் குறித்து நமக்குக் கவலையிருக்கவில்லை. ஆயினும் பரஸ்பர அர்த்தமற்ற சச்சரவுகளில் நாம் சளைக்கவில்லை இவ்வித சில்லறை பேதங்களை பெரிதாக்கி முஸ்லிம்களுக்கு எதிராக ஹிந்துக்களைத் தூண்டி விடுவதுமட்டுமின்றி காங்கிரஸில்உள்ள வேற்றுமையற்றதலைவர்களையும் பலஹீனப்படுத்த வகுப்புவாத ஹிந்து தலைவர்கள் முயற்சித்து வருகின்றனர். இந்நிலையில் முஸ்லிம்கள் சில்லறை பேதா பேதங்களை விட்டு தங்களுடைய பரந்த மனோபாவத்தையும் சகிப்புத்தன்மையையும் காட்டவேண்டும் அதனால் முஸ்லிம்கள் பலமடைவதுடன் வகுப்புவாத ஹீந்துக்கள் பலஹீனமடைந்தும் விடுவார்கள்

# —: ஜவுளி விலையேற்றம். :—

இறங்க ஆரம்பித்திருந்த ஜவுளி விலைகள் திடீரென்று திரும்பவும் ஏறிவிட்டன. கிட்டத்தட்ட யுத்த காலத்தில் இருந்த அளவுக்கு இன்று விலைகள் ஏறியிருக்கின்றன வியாபாரிகளைக் கேட்டால் மில் முதலாளிகள் விலைகளை உயர்த்திவிட்டதாகவும் கண்ட்ரோல் காலத்தில் நிர்ணயிக்கப்பட்டிருந்த விலைகளுக்கு மேல் இரண்டு பங்கு விலை கொடுக்க வேண்டியிருப்பதாகவும் சொல்லுகின்றார்கள். பொதுமக்கள் படும் அவதியை வர்ணிக்கமுடியாது. இவ்வித நிலைமையை எந்த அரசாங்கமும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. மில் முதலாளிகளைக் கட்டுப்படுத்த கண்ட்ரோல் ஏற்படுத்தினால் உடனே உற்பத்தி தடைபடுவதாகவும் தொழில் பாதிக்கப்படுவதாகவும் மில் முதலாளிகள் சர்க்காருக்கு எதிர்ப்பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிடுகின்றனர். கட்டுப்பாட்டை தளர்த்திய மாத்திரத்தில் கொள்ளை லாபமடிக்க ஆரம்பித்து விடுகின்றார்கள். இந்த தர்மசங்கடத்தை சர்க்கார் அதிக நாள் பொறுத்துக் கொண்டிருப்பதற்கில்லை சர்க்காரின் கைகளை பலப்படுத்துவதற்கு மாறாக தங்கள் சுயநலப் போக்கால் மில் முதலாளிகள் பொதுஜனங்களிடையே அதிருப்தியும் கொந்தளிப்பும் ஏற்படுத்துகையில் சர்க்கார் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகின்றது. ஒரு சிலர் கொள்ளை லாபமடித்து கொழுக்க பலகோடி மக்களின் நலனை பலியிட முடியாது.

ஏதாவதொரு தொழிற்சாலை சர்க்காரின் தொழில் முன்னேற்றக் கொள்கையுடன் ஒத்துழைக்காமல் போனால் அந்த தொழிற்சாலையை சர்க்காரே எடுத்துக் கொண்டு நடத்துவதற்கான பூரண உரிமை சர்க்காருக்கு தொழில் தீர்மானத்தின் மூலம் இருக்கின்றது. இன்றைய நிலைமையில் அவ்வித நடவடிக்கை நன்மை பயக்குமா? இல்லையா? என்று சொல்லமுடியாது. ஆயினும் ஈவிரக்கமற்ற முறையில் மில் முதலாளிகள் பொதுமக்களைச் சுரண்டிக் கொள்ளைலாபமடிக்க முற்பட்டிருக்கையில் அரசாங்கம் உடனடியாகக் கடுமையான நடவடிக்கையில் இறங்கியாகவேண்டும். சர்க்காரின் எச்சரிக்கைக்குப் பிறகும் மில் முதலாளிகள் தங்கள் போக்கை மாற்றிக்கொண்டு கொள்ளை லாபப் படலத்தை நிறுத்தா விட்டால் அவர்கள்மீது திரும்பவும் அமித லாப வரி விதிக்கப்படவேண்டும். அத்துடன் உற்பத்தி முழுதும் சர்க்காரே எடுத்துக் கொண்டு தங்கள் மேற்பார்வையில் பொதுமக்களுக்கு நியாயமான விலைக்கு ஜவுளி கிடைக்கும்படி வினியோகிக்க வேண்டும். மக்களைச்சுரண்டி, கொள்ளைலாபமடித்து தேசம் பூராவிலும் அமைதியைக் குலைக்க ஒரு சில சுயநலக்கார முதலாளிகளுக்கு உரிமையில்லை.

---

இனி நாம் இந்தியாவில் ஹிந்து சகோதரர்களுடன் சேர்ந்துதான் வாழப்போகிறோம் என்பதை முஸ்லிம்கள் நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய குறைகளை எடுத்துச் சொல்ல மூன்றாவது சக்தி இங்கு இல்லை. எனவே பெரும்பான்மையோரின் நம்பிக்கையும் நல்லெண்ணமும் பெறமுயற்சிக்கவேண்டும். அவர்கள் தவறிச்செல்வதை பார்த்து நாமும் தவறிச்செல்வது சரியல்ல. வகுப்புவாதத்தின் குருட்டு வெறுப்பு நிரந்தரமானதல்ல. அது சீக்கிரத்தில் நீங்குவது நிச்சயம். தேசியசகோதரர்கள்மீது குறைகளை மட்டும் சொல்லிக்கொண்டேயிருப்பதை விட்டு நெருக்கடியான கட்டத்திலும் கவுரவமான வழியைக் கண்டுபிடிப்பதற்கு நாம் திறமையுள்ளவர்களாக இருக்கவேண்டும். மஹாத்மாவின் இஷ்டத்துக்கு மாறாக சில மாகாணங்களில் ஹிந்துஸ்தானிக்கு பதிலாக ஹிந்தி சர்க்கார் பாஷையாக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் குறை மட்டும் சொல்லிக் கொண்டிருப்பதால் பயனில்லை சற்றும் தயக்கமின்றி முஸ்லிம்கள் ஹிந்தியை கற்றுக்கொள்ள வேண்டும். ஹிந்திபாஷை இப்பொழுதுதான் உருவாகின்றது. முஸ்லிம்கள் அதில் பங்கெடுத்துக் கொள்வதால் சமஸ்கிருதமாக போய்விடாமல் தடுக்க முடியும்.

## சுதந்திரச் செல்வம்

சுதந்திரமென்பது ஹல்வா தட்டல்ல. நாட்டிலுள்ள குறிப்பிட்ட ஒருவகுப்பார் மட்டும் அதை தட்டிக்கொண்டு போய்விட முடியாது. சுதந்திரம் சூரிய பிரகாசத்தைப் போன்றது. அதை அனுபவிக்கமுடியாமல் செய்துவிடுவது சாத்தியமேயில்லை. அப்படிச் செய்ய நினைப்பவர்களின்மண்டையிலிருந்து அடிமை மனப்பான்மை இன்னும் நீங்கவில்லையென்றே அர்த்தம். வகுப்பு வெறி மூளுவதைப்போலவே திடீரென்று அடங்கியும் போகும். அதை வைத்துக்கொண்டு பிற்போக்காளர்கள் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போட நினைக்கின்றனர். முஸ்லிம் பிற்போக்காளர்களைப்போலவே அவர்களும் ஏமாறுவது நிச்சயம்.

நாட்டின் வறுமை, கல்வியின்மையைப் போக்க வகுப்புவாதம் பரிகாரமல்ல. சமுதாய,பொருளாதாரப் புரட்சியே அதை சாதிக்க முடியும் அவ்வித புரட்சியால் பலனடைவதில் முஸ்லிம்கள் யாருக்கும் சளைத்தவர்களாயில்லாமலிருக்க வேண்டியது அவர்களுடைய கடமை. பொருளாதாரப் புரட்சியைத்தடுக்க வகுப்புவாத பிற்போக்கு சக்திகள்ஹிந்துக்களிடையே வகுப்புவாதத்தை புகுத்தப் பார்க்கின்றன அவை தோல்வியடைவது நிச்சயம் ஆனால் வெள்ளை ஆட்சியில் விளையாடிக்கொண்டிருந்த வகுப்புவாதக் கண்ணாமூச்சி விளையாட்டை முஸ்லிம்கள் இனியும் விளையாடிக்கொண்டிருந்தால் ஹிந்துக்களைத் தூண்டிவிடும் பிற்போக்கு சக்திகள் வெற்றியடைவது நிச்சயம்.

# பட்டாணிஸ்தான் கிளர்ச்சி.

—( கான்காஜி காபுலி )—

இந்தியப் பிரிவினைக்குப் பிறகு பட்டாணியன் நிலைமை என்ன?

ஏகாதிபத்திய ஆட்சியில் இருந்த நிலைமையிலேயே இன்றைக்கும் பட்டாணியன் இருக்கிறான்.

இந்தியா விடுதலையடைந்தது குறித்து பட்டாணியன் பரவசமடைகிறான். அதேசமயத்தில் பட்டாணியன் இரட்டை அடிமையாகிவிட்டான். ஆங்கிலோ பாகிஸ்தான் சாம்ராஜ்யத்திற்கு பட்டாணியன் அடிமையாக்கப்பட்டுள்ளான். அதனால் அவன் மனம் புழுங்குகின்றது.

அன்று பாதுஷாகான் (கான் அப்துல் கப்பார் கான்) தலைமையில் காங்கிரஸுடன் சேர்ந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்ற பட்டாணியன் இன்று ஏகாதிபத்திய நண்பர்களை எதிர்த்து நிற்க ஆயத்தம் செய்து வருகிறான். வெள்ளையனின் பிரிவினையை குரங்குப் பிரிவினையைக் காட்டிலும் அதிகமாய் மதிக்க பட்டாணியன் தயாரில்லை.

பெஷாவரிலிருந்து கல்கத்தாவரை சாலையை ஏற்படுத்தி எல்லையுடன் வங்காளத்தை இணைத்த ஷேர் ஷாஹ் சூரி ஒரு பட்டாணிய அரசன். எனவே ஐக்கிய சமுதாய கர்த்தாவென பட்டாணியன் பாத்தியதை கொண்டாடுகிறான்.

நொண்டி இந்தியாவும் முடப் பாகிஸ்தானும் முறையே டில்லியிலும், கராச்சியிலும் ஆகஸ்டு 15-ல் சுதந்திர விழா கொண்டாடின. பட்டாணியன் பாதுஷாகான் உத்திரவுப்படி அந்த நாளை மவுனமாகவே கழித்தான். ஏனெனில் அரைகுறை சுதந்திரத்தில் பட்டாணியனுக்கு எவ்வித பங்குமிருக்கவில்லை

அப்படியாயின் பாகிஸ்தானை எதிர்த்து பட்டாணியன் ஏன் கிளர்ச்சி செய்யவில்லை? என்று கேட்கப்படலாம். சாதுக்கள் சண்டையில் கமண்டலிக்கு ஆபத்து என்பதைப்போல் பட்டாணிஸ்தான் பாகிஸ்தான் சச்சரவில் ஒருக்கால் ஹிந்து சகோதரர்கள் கொல்லப்படலாமென்று பட்டாணியன் அஞ்சியதே அவன் பேசாமல் இருந்ததற்குக் காரணம்.

இன்று எல்லைப்புரத்தில் ஹிந்து பட்டாணியர்கள் இல்லை. மேலும் பாகிஸ்தான் சுவர்க்கத்தின் வண்டவாளம் முஸ்லிம் பட்டாணியர்கள் உணர்ந்து விட்டனர். பட்டாணிஸ்தானுக்காகப் போராட பாதுஷா கான் கொடியின்' கீழ் அவர்கள் திரண்டு வருகின்றனர்.

பாகிஸ்தானையும், பிரிட்டிஷ் ஏஜெண்டுகளான பாகிஸ்தானிலுள்ள வெள்ளை கவர்னர்களையும் எதிர்த்து ஆப்கன் ஜாதியார் போராடுவர்.

அமீர் அப்துர் ரஹ்மான் காலத்தில் டீயூராண்ட் லைன் மூலம் ஆப்கானிஸ்தானம் பலூஜிஸ்தானம், எல்லைப்புரம், பொலிடிகல் ஏஜென்ஸிகள் என நான்கு கூறுகளாய்ப்பட்டாணியர்களைபிரிட்டிஷ்ஏகாதிபத்தியம் பிரித்து விட்டது. அதை பட்டாணியர்கள் ஏற்கவில்லை. ஆப்கன் ஜாதியாரின் இஷ்டத்துக்கு மாறாக பிரிவினையை ஏற்க காபூல் அரசருக்கு உரிமை இருக்கவில்லை என்று பட்டாணியர்கள் அன்றிலிருந்தே ஆட்சேபித்து வருகின்றனர். தன்னுடைய வம்சம் அதிகாரத்திலிருக்கவே அமீர் அப்துர் ரஹ்மான் டியூராண்ட் லைன் பிரிவினைக்கு இணங்கினார் என்பது பட்டாணியர்களின் முடிவு.

## சுதந்திர பட்டாணிஸ்தான்

காபூலிலிருந்து வெளிவரும் 'ஸிலாஹ்' என்னும் பத்திரிகை செப்டம்பர் 18-ல் பாதுஷாகானின் கீழ் வரும் அறிக்கை பிரசுரித்தது.

"பட்டாணியர்களின் ஐக்கியத்தைக் காக்க பட்டாணியர்களுக்காக சுதந்திர பட்டாணிஸ்தான் ஒன்று அமைக்க ஆசைப்படுகிறேன். அதற்காக பட்டாணிய சமூகத்தை முன்னணிக்குக் கொண்டுவருவேன். எனக்கு துணைவர்களாய் யாரும் வரவில்லையாயினும் கடைசி மூச்சுவரை தனியாகவே அதற்காக உழைப்பேன்."

மலை ஜாதியினர், மலகானிகள், பொலிடிகல் ஏஜென்ஸிகள், எல்லைப்புரம், பலூஜிஸ்தானம், பஷ்து பாஷை பேசப்படும் பிரதேசங்களும், அடக்குக்கு அப்பாலுள்ள மேற்கு பஞ்சாபுடன் இணைக்கப்பட்டிருக்கும் கேமல்பூர், மியானவாலி, டேராகாஜிகான், முஜப்பர்கட், முல்தான் ஜில்லாக்களும் சுதந்திர பட்டாணிஸ்தானில் அடங்கியிருக்கும்.

எல்லைப்புரம், பலூஜிஸ்தானம், மலைப்பிரதேசம் மூன்றின் மொத்த ஜனத்தொகை கிட்டத்தட்ட எண்பது லட்சமாகும். ஆப்கனிஸ்தான் ஜனத்தொகை ஒரு கோடி. இந்தப் பிரதேசங்கள் அனைத்தும் இயற்கை

யாகவே இணைக்கப் பட்டிருக்கின்றன. அவைகளை தனித்தனியாக பிரிக்கும் எல்லைகள் எதுவும் கிடையாது.

பாகிஸ்தானிலிருந்து இந்த பிரதேசத்தை சிந்து நதி தனியாகப் பிரிக்கின்றது. எனவே, ஆப்கனிஸ்தானத்தையும் சேர்த்துக்கொண்டு சிந்து நதிக்கு அப்பாலுள்ள பிரதேசம் ஆப்கன் பெடரேஷனாக அமைந்தால் அதன் ஜனத்தொகை துருக்கியைவிட அதிகமாயிருக்கும். ஆப்கன் பெடரேஷன் அரபிக் கடலில் சுதந்திர துறைமுகம் ஒன்றையும் கட்ட முடியும். அதனால் வெளி நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பும் ஸ்தானீக உறவும் கொள்வது சாத்தியமாகும்.

## பாகிஸ்தான் அஸெம்ப்ளியில் பாதுஷாகான்

பாகிஸ்தான் சட்டசபையில் பாதுஷாகான் விஸ்வாசப் பிரமாணம் எடுத்ததைப் பார்த்து இந்தியர்களில் அநேகர் பிரமித்தனர். இடைக்கால சர்க்காரில் பண்டித ஜவஹர்லால் நேரு பிரிட்டிஷ் அரசரின் விஸ்வாசப் பிரமாணம் எடுத்ததைப் பார்த்தும் பண்டித நேருவுக்கு ஜே என்று கோஷமிட்டவர்கள் பாதுஷாகான் பாகிஸ்தான் சட்டசபையில் விஸ்வாசப் பிரமாணம் எடுத்ததைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை அரசியலில் முன்னேறுவதும் வெற்றிகரமாக வாபஸாவதும் சகஜம்.

சட்ட சபைக்குள் சட்டபூர்வமான முறையிலும் பட்டாணிஸ்தான் போராட்டத்தை நடத்தவே பாதுஷாகான் பாகிஸ்தான் சட்ட சபைக்குள் பிரவேசித்தார். பட்டாணிஸ்தான் கோரிக்கைக்கு இணங்கும்படி செய்த பிறகு பட்டாணிஸ்தான், ஆப்கனிஸ்தான், பலூசிஸ்தானம் முதலிய பிரதேசங்களை இணைத்து ஆப்கன் பெடரேஷன் அமைப்பதே பாதுஷாகான் நோக்கம். நேசபாவமான முறையில் பட்டாணிஸ்தான் பாகிஸ்தானுக்கு நன்மை பயக்க முடியும்.

பட்டாணியர்களின் கோரிக்கையை அலட்சியம் செய்ய முயற்சித்தால் பட்டாணியர்களுக்கும் பாகிஸ்தானுக்கும் கடுமையான போர் மூளக்கூடும். அந்நிலையில் ஜாதீய அடிப்படையில் ஆப்கனிஸ்தானம் தலையிடாமலிருக்க முடியாது. பாகிஸ்தானுக்கு அது நன்மையளிக்காது அதனால் பட்டாணிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் நிரந்தர பகையே ஏற்படும். ஆகையால் சிநேக பாவமான முறையில் பிரச்னை தீர்க்கப்படவேண்டுமென்று பாதுஷாகான் விரும்புகிறார். பாகிஸ்தான் அதற்குத் தயாராய் இருப்பதாகத் தோன்றவில்லை எனவே பாகிஸ்தான் பட்டாணிஸ்தான் சண்டை தவிர்க்கமுடியாமல் போகலாம்.

## ஹிந்து முஸ்லிம் வகுப்புவாதிகளின் சதி

பாகிஸ்தானிலுள்ள ஹிந்து வகுப்பு வாதிகளும் லீகர்களுமாகச் சேர்ந்து எல்லைப்புரத்தில் ஹிந்துக்களை திரும்பவும் குடியேற்ற முயற்சிக்கின்றனர். பட்டாணிஸ்தான் கிளர்ச்சியை முறியடிப்பதே அவர்களின் நோக்கம். ஹிந்துக்களின் பெயரைச் சொல்லிக்கொண்டு பட்டாணியர்களின் உணர்ச்சியுடன் விளையாட லீகர்கள் முயற்சிக்கின்றனர்.

பட்டாணிஸ்தான் அமையாதவரை ஹிந்துக்கள் எல்லைப்புரத்துக்கு திரும்பிவரக்கூடாதென்றே தேசப்பற்றும் தீர்க்க தரிசனமும் உள்ள பட்டாணியர்கள் விரும்புகின்றனர். பிறகு முஸ்லிம் பட்டாணியர்கள் ஹிந்து பட்டாணியர்களை கவுரவமான முறையில் எல்லைப்புரத்துக்கு அழைத்துவந்து குடியேற்றுவார்கள் என்பது நிச்சயம். பாதுஷாகான் சந்தேகத்துக்கு இடமின்றி அடியில்கண்டவாறு பட்டாணிஸ்தானை விளக்கியுள்ளார்.

"பட்டாணியர்களாகப் பிறந்து பஷ்து பேசும் அனைவருக்கும் பட்டாணிஸ்தானில் உரிமையுண்டு. ஜாதீய அடிப்படையில் பட்டாணிஸ்தான் இருக்குமேயல்லாது மத அடிப்படையிலல்ல."

## பட்டாணிஸ்தான் பெறமுயற்சி

பட்டாணிஸ்தான் அமைக்க இரண்டு விதமாய் முயற்சிக்கப்படும். பாகிஸ்தானுக்குள்ளிருந்து கொண்டு சட்டரீதியாக பட்டாணியர்களின் பிறப்புரிமைகளுக்காக போராடுவது ஒன்று அதற்காகவே பாதுஷாகான் பாகிஸ்தான் சட்டசபையில் பிரவேசித்தார்.

பட்டாணிஸ்தான் கோரிக்கைக்கு இணங்கும்படி வெளியிலிருந்தும் பாகிஸ்தானை நிர்ப்பந்திப்பது இன்னொன்று. கல்லாத் சமஸ்தானம் பாகிஸ்தானில் சேராமலிருப்பது இத்துறையில் பட்டாணியர்கள் செய்துவரும் முயற்சியையே எடுத்துக்காட்டுகிறது. இப்பிரச்னையில் பலூசிகளுக்கும் ஆப்கன்களுக்குமிடையே வெள்ளையர்கள் ஏற்படுத்தியிருந்த வேற்றுமை மறைந்து வருகின்றது.

ராணுவத்தையும், ஆயுத அரசியலையும் கொண்டு பட்டாணியர்களின் பிறப்புரிமைகளைப் பறித்து அடக்கிவைத்திருந்ததே வெள்ளையர்களை பட்டாணியர்கள் வெறுப்பதற்குக்காரணம். பெயரளவு இஸ்லாமிய ஆட்சியான பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகும் பட்டாணியர்களின் குறை நீங்கியபாடில்லை. முன்னைவிட தங்கள் நிலைமை மோசமடைந்துவிட்டதாகவே பட்டாணியர்கள் உணருகின்றனர்.

காஷ்மீர் முஸ்லிம்களின் பெயரைச் சொல்லி பட்டாணியர்களின் உதவியை நாடும் பாகிஸ்தான் அதே சமயத்தில் பட்டாணிய உரிமைகளுக்கு இணங்க மறுப்பது பட்டாணியர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

கல்லாத் சமஸ்தானம் பாகிஸ்தானில் சேராமல் தனித்திருப்பதற்கும் அதுதான் காரணம். பிரிட்டிஷார் குத்தகைக்கு வாங்கி அபகரித்துக்கொண்டிருந்த பிரதேசங்களை பாகிஸ்தானும் திருப்பிக் கொடுக்கத் தயாரில்லை அத்துடன் பாக்கியுள்ள பிரதேசங்களின் சுதந்திரத்தையும் பறிக்க பாகிஸ்தான் முயற்சிப்பதை பலூஜிஸ்தான் வாசிகள் உணர்ந்து விழிப்படைந்துவிட்டார்கள்.

## பட்டாணிஸ்தான் என்றால்?

பாகிஸ்தானிலிருந்து சில பிரதேசங்களை பட்டாணியர்கள் பிரித்துக்கேட்பதாக சிலர் நினைப்பது தவறு. முஸ்லிம் லீக் தோன்றுவதற்கு முன்னாலேயே பட்டாணிஸ்தான் கோரிக்கை தோன்றி எத்தனையோ வருஷங்கள் ஆயின அப்பிரதேசத்திலுள்ள சுய மரியாதையுள்ள மக்கள் இன்று தங்கள் உரிமைகளைத்தான் கேட்கின்றனர் முஸ்லிம்கள் மெஜாரிடி பிரதேசங்களை தனியாகப் பிரிக்கவேண்டுமென்று ஹிந்துக்கள், வெள்ளையர்களிடம் முஸ்லிம் லீக் கேட்டதைப் போலவே பட்டாணியர்களின் மெஜாரிடி பிரதேசங்கள் தனியாகப் பிரிக்கப்படவேண்டுமென பட்டாணியர்கள் கேட்கின்றனர். பாகிஸ்தான் புத்திசாலித்தனமாய் நடந்துகொள்ளத்தவறினால் ஆப்கன் ஜாதியாருக்கும் லீகர்களுக்கும் அதி பயங்கர யுத்தம் ஒன்று மூண்டே தீரும் பாகிஸ்தானுக்கு அது சர்வ நாசத்தையே கொடுக்கும். பட்டாணியர்கள் பொருத்தவரையில் அவ்விதப் போராட்டங்களுக்கு பழக்கப் பட்டிருக்கின்றனர். ஏகாதிபத்திய சக்திகள் இதற்கு முன்னாலும் பல தடவைகளில் பட்டாணியர்களுடன் மோதி பலனை அனுபவித்திருக்கின்றன.

## உணர்ச்சிமிக்க வாலிபபட்டாணியர்கள்

பாதுஷாகானும் குதாயீ கித்மத்கார்களும் அஹிம்சா முறையில் லட்சியத்தை அடைய முயற்சிக்கின்றனர். ஆயினும் லட்சிய சித்திக்காக எல்லா முறைகளையும் கையாளத்தயாராயிருக்கும் பட்டாணியர்களின் ஒரு கோஷ்டியும் இருக்கத்தான் செய்கிறது அவர்கள் பாதுஷாகானை கவுரவித்தாலும் பலாத்காரத்தைக்கண்டு பின்னடைவதுமில்லை பிரிட்டிஷ் அமெரிக்க நலனுக்காக பாகிஸ்தான் உபயோகிக்கப்படுவதாகவும் சாம்ராஜ்ய சக்திகளை சிதறடிப்பதே பட்டாணிஸ்தானின் வேலையென்றும் அவர்கள் நம்புகின்றனர்.

சட்டபூர்வமான அஹிம்சா முறைகளால் பாகிஸ்தான் இணங்கி வராது. எதுவரை ரத்தம் கொடுக்கவும் வாங்கவும் பட்டாணியர்கள் முன்வரமாட்டார்களோ அதுவரை பாகிஸ்தான் வழிக்கு வரமுடியாது என்பது அவர்களுடைய முடிவு நாளுக்கு நாள் அவர்கள் எண்ணிக்கை அதிகரித்தும் வருகிறது ஒரு நாள் பாதுஷாகானின் அஹிம்சை தோல்வியடைந்து விடுவதும் சாத்தியமே. அந்நிலையில் மேற்குப் பஞ்சாப், பாகிஸ்தானிலிருந்து ஹிந்து, சீக்கியர்களும் கிழக்கு பஞ்சாப் டில்லியிலிருந்து முஸ்லிம்களும் வெளியேறியதைப் போலவே பட்டாணிஸ்தானிலிருந்தும் லீகர்கள் ஓடவேண்டியிருக்கும்.

## மூன்று தலைவர்கள்

பட்டாணிஸ்தான் கிளர்ச்சியின் தலைவர்கள் மூன்று பேர். எல்லைப்புரத்தில் பாதுஷாகான், பலூஜிஸ்தானில் அப்துல் ஸமத்கான், வஜீரிஸ்தானில் இப்பி பக்கிரி. பாதுஷாகானும் கான் அப்துல் ஸமத்கானும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வாழ்க்கையின் பெரும் பகுதியை சிறைக்கம்பிகளுக்குள் கழித்தவர்கள். இப்பி பக்கிரியோ வெளி அரணிலிருந்து சதா ஏகாதிபத்தியத்தின்மீது பீரங்கிப் பிரயோகம் செய்துவந்த வீரர்.

இன்று சாம்ராஜ்ய சக்தி முஸல்மான்களின் வேஷத்தில் பாகிஸ்தான் ரூபத்தில் இருந்துவருவது தான் துரதிர்ஷ்டம். பட்டாணியர்களின் உரிமைகளுக்கு இணங்க மறுப்பதுடன் அவர்களை அடிமைத்தனைகளில் இறுகப் பிணைத்துவைக்கவும் முயற்சிக்கின்றது ஆயினும் பட்டாணியர்கள் தங்கள் லட்சிய வெற்றியில் நம்பிக்கை மட்டுமல்ல; உறுதியும் கொண்டிருக்கின்றனர். ஏகாதிபத்தியத்தின் படுக்கை இந்தியாவிலிருந்து சுருட்டப் பட்டிருப்பதைப் போலவே பாகிஸ்தானிலிருந்து லீக், காதியான் படுக்கையும் சீக்கிரமே சுருட்டப்படுமென்பது நிச்சயம்.


## ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —


Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E Kadalangudi St, Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.